காஞ்சி

ஆசிரியர் - அண்ணாதுரை

20 காசு ஜூலை-18-1965

கேள்வி ? பதில்

(1) வழக்கறிஞர்கள் ஆட்சியைக் கைப்பற்றப் பார்க்கிறார்கள் என்று முதலமைச்சர் பக்தவத்சலம் பேசுகிறாரே, ஏன்?

பதவி பறிபோய் விடுமோ என்ற பயம் காரணமாகத்தான்!

(2) நாகலாந்தில் பிஜோவின் செல்வாக்கு சரிந்துபோய்விட்டதா?

சொல்வதற்கில்லையே. இந்தியப் பேரரசே, நாகலாந்தின் எதிர்காலம் பற்றிப் பேசிவரும் சமாதான ஏற்பாட்டுக்கு பிஜோ ஒத்து வருவாரா என்று அறிந்து வந்து கூறும்படி பிஜோவின் தம்பியை இலண்டனுக்குப் போக அனுமதித்திருக்கிறார்கள் என்றால் பிஜோவின்செல்வாக்கு குறைந்து விட்டது என்று பொருள்!

(3) கடலில் தங்கம்கூட இருக்கிறதாமே உண்மையா?

உண்மைதான்! ஒரு கன மைல் கடல்நீரில் சுமார் 50 இலட்சம் பவுன் மதிப்புள்ள பொன் இருக்கிறதாம். ஆனால் இதைத்தனியே பிரித்து எடுப்பதற்கு 250 இலட்சம் பவுன் செலவாகுமாம். அதனால்தான் அந்த முயற்சியில் ஈடுபடவில்லை. 1918-ம் வருடத்தில் ஒரு ஜெர்மன் விஞ்ஞானி இந்த முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெறவில்லை என்று கூறப்படுகிறது.

(4) காங்கிரசையும் தோற்கடிக்க வேண்டும் என்று கூறிக்கொண்டே காங்கிரசை எதிர்க்கும் கழகத்தையும் இழித்தும் பழித்தும் பேசுபவர். பற்றி என்ன எண்ணுகிறீர்?

உப்பில்லை சப்பில்லை உன் சாப்பாட்டில் என்று கூறிவிட்டு ஊசச் சோறு தின்னப்போகும் பேர்வழியைப் பற்றி என்ன எண்ணுவோம் — அதேதான் இந்தப் பிறவிகளைப்பற்றியும்.

(5) அந்தக்கட்சி சரியில்லை இந்தக் கட்சி பிரயோஜனமில்லை என்று எல்லாவற்றுக்கும் குறை கூறிக் கொண்டிருப்பவர்களுக்கு என்ன கிடைக்கும்?

குப்பையைக் கிளறிக் கொண்டிருக்கும் கோழிக்கு என்ன கிடைக்கிறது! புழு! அதுபோலச் சிலகிடைக்கும் மனச்சொறிபிடித்தவர்களுக்கு.

(6) விளம்பரம் அதிகம் வருகிறது ஆகவே எமது பத்திரிகையே பெரிய பத்திரிகை என்பது ஒப்புக்கொள்ளப்படவேண்டிய வாதமா?

ஊரிலே உள்ளவர்களிலே மிக அதிகமானபேர் காலையிலே வருவது நான் உள்ள இடத்துக்குத்தான் — காலைக்கடன் முடித்துக் கொள்ளும்போது — ஆகவே திருக்குளத்தைவிட எனக்குத்தான் மதிப்பு அதிகம் என்று ஊர்க்கோடி ஏரி சொன்னால், ஒப்புக் கொள்ளுவோமா!!

(7) விளக்கெண்ணை உடம்புக்கு நல்லதா?

முதலிலே ஒன்று தெரிந்து கொள்ளவேண்டும் — எண்ணை என்று எழுதுவது சரியான தமிழல்ல — எண்ணெய் என்று எழுதியிருக்கவேண்டும். இதைக் கூடச் சரியாக எழுதத் தெரியாமல், நாம்தமிழர் நாம்தமிழர் என்று கூறினால், மதிப்பார்களா? போகட்டும். விளக்கெண்ணெய் உடம்புக்கு நல்லதா என்று தானே கேட்கிறீர். கடுப்பு உள்ளவர்களுக்கு இது மிகமிகத் தேவை! கடுப்பு போக்க கைகண்ட மருந்து விளக்கெண்ணெய். கடுப்பு பொல்லாதநோய்.

(8) என்னிடம் ஒரு வேட்டை நாய் இருக்கிறது—ஆனால் எப்போதும் வாலை காலுக்கு அடியில் வைத்துக்கொண்டு படுத்து உறங்குகிறது- ஏன்?

அது வேட்டை நாய் அல்ல! வெறும் குளைப்புநாய். சிலர் இருக்கிறார்களே மற்றவர்களைப் பார்த்து போராட்டத்தை விட்டு விட்டார்கள்! ஐய்யய்யே! செச்சேச்சே! என்றுபேசிக்கொண்டே சுருண்டு படுத்துக்கொண்டு சுணவத்துக்கொண்டு இருக்கிறார்களே செக்குப் புத்தகத்தை அது போல!

(9) டெலிவிஷன் கொண்டுவரப் போகிறார்களாமே, அதைப்பற்றி என்ன எண்ணுகிறீர்?

கையெல்லாம் சொறி சிரங்கு -விரலுக்கு வைரமோதிரம்!-என்றால் என்ன எண்ணுவீர்கள்! அதுபோலத்தான் வறுமையும் நெளியும் நிலையில் நாடு இருக்கும் போது அதைப் போக்காமல், டெலிவிஷன் கொண்டுவருவது.

(10) பஞ்சாப் சிக்கலைத் தீர்க்க காமராஜர் போகாமல் நந்தாவை அனுப்பி வைத்தது ஏன?

வெற்றி கிடைத்தால், காமராஜர் சொன்னபடி நந்தா செய்தார் — சிக்கல் தீர்ந்தது என்று பாராட்டைத் தட்டிக்கொள்ளலாம்; தோற்றுவிட்டால், சிக்கலைப்போக்க நந்தாவால் முடியுமா, அது காமராஜர் ஒருவரால் மட்டுந்தான் முடியும் என்று சிலம்பு போடலாம் அல்லவா! அந்தத் தந்திரம்தான் இந்த ஏற்பாடு.

(11) கட்சப் பிரச்சினை பற்றி ஏன் காமராஜர் கவனிக்கக் காணோம்?

கேட்டாயே ஒரு கேள்வி! அவருக்கு அதற்கெல்லாமா நேரம் இருக்கிறது! முழு நேரமும் கழகப் பிரச்சினைபற்றி அல்லவா செலவிடவேண்டி இருக்கிறது!- அடுத்த வேளை சாப்பாடு பற்றிக் கவலைப்படுபவரிடம்போய் சமாராதனை எப்போது செய்யப் போகிறீர்கள் என்று கேட்பது போலிருக்கிறது உமது கேள்வி.

(12) நிறவெறி பிரிட்டனிலும் பரவி இருக்கிறதாமே, உண்மையா?

தலை தூக்கி இருக்கிறது. அமெரிக்காவில் உள்ள வெள்ளைவெறியர்கள், கூ-கிளக்ஸ்-கிளான் என்ற பயங்கர இயக்கம் நடத்துவதுபோல பிரிட்டனிலும் சில வெறியர்கள் நடத்த முனைந்துள்ளனர். ஆனால் பிரிட்டனில் இப்படிப்பட்ட பித்தர்களுக்கு ஆதரவு கிடைக்காது.

○

காஞ்சி

மலர் 1 18-7—65 இதழ் 49

எல்லோரும் இந்நாட்டு மன்னர்!

கவிதை அரங்கமொன்றில். இந்தத் தலைப்பினில் கவி வாணர் பலர் கவிதைகள் இயற்றி அரங்கேற்றப் போகின்றனராம். விழா! காமராஜரின் பிறந்தநாள் விழா!

சோஷியலிசம்-- அவருடைய பேச்சு-மூச்சு-என்கிறார்கள். மெத்த மகிழ்ச்சி. பேச்சும் மூச்சும் ஒலி அளவி விருந்து. நாட்டு ஒளி தந்திடும் அளவு வளர்ந்திடவேண்டும் என்று பெரிதும் விரும்புகிறோம்.

உழுபவனுக்கே நிலம்! என்று முன்பு முழக்கம் தமிழகத்தில் எழும்பியபோது, இந்தத் தலைவர்,

உழுபவனுக்கு நிலம்!
இருப்பவனுக்கு வீடு!
ஏறுபவனுக்கு இரயில்!

என்று கேலி பேசினவர்; இன்று சோஷியலிசம் பேசுகிறார். நல்ல வளர்ச்சி, வரவேற்கத்தக்க வளர்ச்சி; ஆனால் அது விஜயலட்சுமி பண்டிட் கூறியதுபோல, 'உதட்டளவு' என்றாகிவிடக்கூடாது. உள்ளத்திலிருந்து வரவேண்டும்.

விழா நாளன்று 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' எனும் தலைப்பினில் கவிதை இயற்றவேண்டிய முறை இருப்பதால், பலரும் இன்று 'மன்னராக' உள்ள பெரியவர் பற்றிய புகழாரமாகவே தமது கவிதையினைத் தொடுத்தளிக்கக்கூடும்.

உள்ளத்திலே, உயர் எண்ணமும் எழுச்சியும் சுரந்ததனால், வல்லம் வேங்கடபதி என்பார், ஈராண்டுகட்கு முன்பு, எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற தலைப்பிட்டு இயற்றிய கவிதை, இன்றுள்ள நிலையினை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாக இருப்பதால் விழா நடத்துவோர் அல்ல-நாட்டினர் காண்பதற்காக அந்த நற்றமிழ்க் கவிதையை இங்கு தந்துள்ளேன்:

கண்களிலே கடலிரண்டு பொங்கிச் சாய
    இணைற்றோரம் கிளிபோன்றாள் ஒருத்தி நின்று,
"பெண்களிலே நான்பாவி! வறுமைத் தீயில்
    பெற்றுவிட்டேன் இருபிள்ளை கிணற்றுக் காக,
கண்மணிகாள்" என்றணைத்தாள்: முத்தம் இட்டாள்
    கரம்நழுவ மரகதங்கள் கல்லாய் ஆனாள்!
புண்ணதிலே தீப்பந்தம் செருகல் போல
    கைவிலங்குக் காப்பணிந்தாள் நாட்டின் ராணி

வானிருண்டு மண்ணிருண்டு போன வேளை;
    வல்லிருட்டு; இராக்குகையில் வையம் தூங்க
தான்மட்டும் கண்ணயர நெஞ்சம் இன்றித்
    தனியாக இந்நாட்டின் மன்னன் சென்று-

வான்முட்டும் மாளிகையில் சுவரில் கன்னம்
    வைத்திட்டான், உள்நுழைந்தான்; திரும்பிவந்தான்
ஏன்என்று கேட்காதீர்! பசியை ஆற்றும்
    செங்கோலே சிலருக்குக் கன்னக் கோல்தான்!

முடைநாற்ற நீரோடும் தெருவின் ஓரம்
    முத்துநிலா முகத்தழகி மனைவி யோடும்
நடைபயிலா தவழ்மொக்கு, பறவாச் சிட்டு.
    தன்னருமை இளங்குருத்துக் குழந்தை யோடும்
குடைவாயில் பன்றிக்கே அமைத்த வீட்டில்
    குமுறிடுவான், கொந்தளிப்பான், வறுமைப் பாவி
தடையிட்டான், குறுக்கிட்டான் அந்தோ என்பான்;
    தமிழின்பம் அவன்செல்வம் முறுவல் பூக்கும்!

பள்ளியிலே காலைமணி ஒலிக்கக் கேட்டுப்
    படித்திருந்த ஏடுகளைப் பையில் போட்டுத்
தள்ளிதலை வாரிவிட டப்பி கண்டான்
    தன்னுடைகள் மாற்றுதற்குக் கொடியைப்
                                        பார்த்தான்

எள்ளிநகை செய்திடவே 'இல்லை' எங்கும்;
    எரிபசியால் ஏக்கத்தால், உடம்பு வாட
மெள்ளமெள்ள இந்நாட்டின் இளைய மன்னன்
    மேவுதுயர் உயிருண்ணப் பள்ளி சென்றான்
நெய்யுணவு அருந்தியபின் மிகுந்த எச்சில்
    சுருட்டிவரும் இலைபார்த்து வாயில் காத்துக்
கையளவு கிடைக்காதா? காட்டுத் தீபோல்
    பற்றிவரும் பசிப்பிணியும் தீர்ந்தி டாதா?
வையத்தில் நம்வயிறு எச்சில் தொட்டி
    ஆயினதே என்றேங்கி ரத்தக் கண்ணீர்
பேய்மழைபோல் கொட்டுகிறார் நாட்டின் மன்னர்
    பொய்யில்லை; நாய், இதற்குச் சான்று சொல்லும்!
சுட்டகரி போலுடம்பு கருகித் தீய
    சுடுகாடு போமளவும் உழைக்கும் மக்கள்
பட்டதுயர் அளவிட்டுச் சொல்லப் போமோ?
    பழஞ்சட்டி கிழிசல்பாய் கந்தல் ஆடை
பட்டினிக்குக் கைகூழும் கிட்டா வாழ்க்கை,
    பார்மீதில் அவருடைய சோக வாழ்க்கை!
பட்டுமெத்தைப் பழச்சாறு, பளிங்கு வீடு
    பாடுபடா ஒருசிலரின் போக வாழ்க்கை!
                இந்நிலையில்...............
எல்லோரும் இந்நாட்டின் மன்னர் என்னும்
    பொல்லாத உரைதன்னைக் கேட்டுவிட்டால்
நல்லோரே நெஞ்சந்தான் பொறுக்கு தில்லை
    நாட்டினிலே ஏனிந்த மேடு பள்ளம்?
கல்லாதார், இல்லாதார், சாலை வாழ்வார்
    கசையடியும் கைவிலங்கும் வாழ்வாய்க் கொள்வார்
இல்லாமல் போம்வரையில் இந்த வார்த்தை
    வெறும்வார்த்தை; பச்சைப்பொய்; கானல்நீர்தான்.

அட்டைப்படம்

அன்றும் இன்றும்

கற்பனைப் பேச்சு

அன்று அமைச்சர் முழக்கம்:

சுயராஜ்யம் நடைபெறுகிறது. இதிலே அதிகாரிகள் பொறுப்புடன், அடக்க ஒழுக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும். எதற்கெடுத்தாலும் சட்டம், விதி, என்று எதையாவது காட்டி முட்டுக்கட்டை போடுவது தட்டிக்கழிப்பது கூடாது. மக்கள் சும்மா இருக்கமாட்டார்கள். கூட்டுப் பண்ணை முறை, மதுவிலக்கு திட்டம், கதர், கிராமக் கைத்தொழில். இப்படிப் பல புதிய திட்டங்கள் போட்டிருக்கிறோம். இவைகள் வெற்றி பெறுமா பெறாதா என்றெல்லாம் சந்தேகம் கிளப்பும் பேச்சைப் பேசக்கூடாது. இது வெள்ளைக்கார ஆட்சி அல்ல; அதிகாரிகளுக்கு அது கவனத்தில் இருக்கவேண்டும். இது மக்களாட்சி! மகாத்மா கட்சியின் ஆட்சி! காங்கிரசாட்சி! இதிலே ஊழல், இலஞ்சம், சிவப்பு நாடா போன்றவைகள் ஒழிக்கப்படும்; இந்த நோக்கம் அறிந்து பணிபுரிய வேண்டும் அதிகாரிகள். பழைய அமுல், ஆர்ப்பாட்டம் கூடவே கூடாது. முதலில், நமது நாட்டின் விவசாயம் செழிப்பாக வேண்டும். உணவுக்காக வெளிநாடுகளிடம் பிச்சை கேட்பது, கேவலம், மிகக் கேவலம். நமக்குத் தேவையான உணவை நாமே, இங்கேயே, உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். வெளிநாடுகளிலிருந்து உணவு வாங்கும் இழிவு போக்கப்பட வேண்டும்; போக்கிவிடப் போகிறோம். பொறுப்பை உணர்ந்து அதிகாரிகள் நடந்துகொள்ள வேண்டும். இலஞ்சம் வாங்குவதாக எந்த அதிகாரி மீதாவது புகார் வந்தால் சும்மா இருக்கமுடியாது. கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தேசியவாதிகளைத் தண்டித்துப் பழக்கப்பட்டவர்களான அதிகாரிகள் இப்போது தேசியவாதிகளின் கீழ் வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த மாறுதலை உணர்ந்து, அதிகாரிகள் மக்களை மதித்து நடந்துகொள்ள வேண்டும் முன்பு விதேசிகள் திட்டம் போட்டார்கள். இப்போது தேசியத் திட்டம் போடப்படுகிறது. இதைச் சரியான முறையில் அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டும். குற்றம் குறைகூறிக்கொண்டு. அக்கறையற்று இருக்கக்கூடாது. வெள்ளைக்காரனுடன் ஒத்துழைத்த அதிகாரிகளை ஏன் வேலையில் வைத்துக்கொள்வது என்று பலரும் கேட்கிறார்கள். நியாயமான கேள்விதான்; ஆனாலும் நாங்கள் காந்தீயவாதிகள், யாரையும் பழி வாங்கும் எண்ணம் எமக்குக் கிடையாது. எமது கடன் பணி செய்து கிடப்பதே. சிறையில் பல கொடுமைகளைத் தாங்கிக் கொண்டோம், இப்போது பதவியிலும் பல தொல்லைகள் ஏற்படும், அவைகளையும் தாங்கிக்கொள்வோம். மக்களின் அன்பும் ஆதரவும் எமக்கு இருக்கிறது. அதைவிடச் சிறந்த வலிவு வேறு என்ன இருக்கிறது. மக்களுக்காகவே இந்த ஆட்சி என்பதை மறவாமல் அதிகாரிகள் நடந்துகொள்ள வேண்டும்.

○

இன்று அதிகாரி பேசுகிறார்:

அமைச்சர் எனக்குப் புதியவரல்ல. நான் 1937-38ல் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தபோது சட்டத்தை மீறியதற்காக ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை கொடுத்திருக்கிறேன் இவருக்கு. அப்போது, சட்டத்தை மீறியவர், அதற்காகப் பிரசாரம் செய்தவர், சட்டம் மதிக்கப்படவேண்டும் என்பது பற்றியும், சட்டத்துக்கு உட்பட்டுத்தான் சகல காரியமும் செய்யப்பட வேண்டும் என்றும் மக்களுக்குப் புத்திமதி சொல்லுவதைக் கேட்கும்போது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. நாம் கொடுத்த ஆறு மாதத் தண்டனை பலனற்றுப் போய் விடவில்லை, சட்டத்தின் பெருமையை இவர் உணரச்செய்திருக்கிறது என்ற மகிழ்ச்சி.

ஆர்வத்தால் எதையும் பேசிவிடலாம், எந்தத் திட்டமும் போட்டுவிடலாம். அதிகாரிகளாகிய நாங்கள் அந்தத் திட்டம் தேசியத் திட்டமா, விதேசியத் திட்டமா என்பதை முக்கியமானதாகக் கருதமாட்டோம்; அந்தத் திட்டம் வெற்றிபெறுமா, அதற்கான பணவசதி, மற்ற வசதி இருக்கிறதா என்றுதான் பார்ப்போம். இல்லை என்று தெரிந்தால், இந்தத் திட்டம் சரியில்லை என்று சொல்லுவோம். எப்படியாவது நடத்தத்தான் வேண்டும் என்று மந்திரிகள் கூறினால். நாங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டோம், இனி உத்திரவுக்குக் கீழ்ப்படிவோம் என்று கூறிவிடுவோம். அந்த முறையில்தான், கூட்டுப்பண்ணை திட்டம் மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெறாது என்று எடுத்துச் சொன்னோம்-கேட்கவில்லை. எஜமானர்கள் சொல்கிறபடி செய்வது என்ற தர்மப்படி வேலை செய்தோம் இப்போது, நாங்கள் சொன்னதுதான் சரி என்பதைக்காலம், அனுபவம் காட்டிவிட்டது. கூட்டுப்பண்ணை முறை தோற்றுவிட்டது என்று மந்திரி ஒப்புக்கொண்டுவிட்டார் மதுவிலக்கும் வெற்றிபெறவில்லை என்று தெரிவித்திருக்கிறார். இதை நாங்கள் முன்பே சொன்னோம், அப்போது கேட்கவில்லை. அதனால் எங்களுக்குக் கோபம் இல்லை. இப்போதாவது உண்மையை உணர்ந்தார்களே என்பதிலே மகிழ்ச்சி அடைகிறோம். கதர்த் திட்டமும் அப்படித்தான், அதை எப்போது விட்டுவிடுவார்களோ தெரியவில்லை. ஒய்வு பெறப்போகும் நாளில் ஒன்றே ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர்கள் இலஞ்சம் வாங்குவதாகப் புகார்கள் வந்தபடி இருக்கின்றன. இது மிகக் கேவலம். நாட்டுக்கே அவமானம். இப்போது நான் அந்த இலாகாவில்தான் இருக்கிறேன். அவ்விதமான கெட்ட பெயர் வராதபடி அமைச்சர்களாக வருகிறவர்கள் நடந்துகொள்ள வேண்டும். ஜெய் இந்த்!

●

தம்பி

அப்போதே செய்த முடிவு!

ஒரு சுவையான கதை-பயனும் உண்டு-சொல்லட்டுமா! நிகழ்ச்சி என்று கூடச் சொல்லலாம், ஆனாலும் கதையின் கவர்ச்சி இருப்பதால் கதை என்றே பெயரிட்டுவிட்டேன். ஓடும இரயிலில் நடைபெற்ற நிகழ்ச்சி-மூன்றாவது வகுப்புப் பெட்டியில்.

இரண்டு குடும்பங்கள் உள்ளன அந்தப் பெட்டியில்-தாயும் மகனும்-தாயும் மகளும்-மகன் ஆறு வயது-மகள் ஐந்து வயது. அழகான சிறுவன், சிறுமி. நமது நாட்டிலேதான் குழந்தைப் பருவத்து அழகு மிகுதியாயிற்றே-வளர வளரத்தானே பாவம், உடல் கருத்து, உறுப்புகள் தேயந்துபோய் பரிதாபத்துககுரிய உருவங்களாகிவிடுகின்றன. சென்ற கிழமை திருமண விழாவிலே சி. பி. சி. சொன்னது நினைவிற்கு வருகிறது-குழந்தைகள் வளரவளர கையைக்காணோம் காலைக்காணோம், வயிறு மட்டுந்தானே முன்னாலே முட்டிக்கொண்டு வந்திருக்கிறது என்றார்-தாய்மார்கள் அனைவரும் கொல்லென்று சிரிததனர்-சிலர் தமது குழந்தைகளை மறைத்துக் கொண்டனர்.

இரயிலில் செல்லும் சிறுவனும் சிறுமியும் அவ்விதம் இல்லை-சிங்காரச் சிட்டுபோல, மல்லி மொட்டுபபோல அழகாக உள்ளன. அந்தத தாய்மார்களுக்கு மகிழ்சசி-பெருமை-தமது குலக் கொடிகளின் அழகு கண்டு.

சிறுவனும் சிறுமியும சிணுங்கிக்கொண்டில்லை-சிரித்து விளையாடுகின்றனர்.

மணிப்பயல் துணிச்சல்காரன், சிறுமியுடன் கைகோர்த்துக்கொண்டு விளையாடுவது மட்டுமல்ல, தன்னிடம் உள்ள 'பிஸ்கட்டு'த் துண்டு எடுத்துத்தந்து தின்னச்சொல்வது மட்டுமல்ல, போககிரிபபயல், முத்தமே கொடுக்கிறான். அந்த வயதிலேயே ஒரு வெட்கம் அந்தப் பெண்ணுககு; பெண்ணைப பெற்றவளோ, முகவாய்க்கட்டையில கையை வைத்தபடி இதனைக் காண்கிறாள், வாயவிட்டுச் சிரிததேவிடுகிறாள்.

"உன்னோட மகன் பெரிய கைகாரப்பயலா இருப்பான்போல இருக்குதே. ஒரு அரைமணி நேரததிலே, என் பொண்ணோடப் பழகிப் பேசி, எம மாந்தூரம் போயிட்டான் பார்ததயா" என்றாள் செல்லமாக!

"வாடா என் ராஜா! என் கண்ணு! பாபாவுக்கு முத்தா கொடுத்தே. கேட்டாளா அந்தககுட்டி! கேட்டிருப்பா, தளுக்குககாரி!"

என்று கூறி, பிள்ளையைப் பெற்றவள் மகனுக்குத் திருஷ்டி கழிக்கிறாள்.

"பையனுக்குச் சிபாரிசு பேசறதைப்பாரு. என் பொண்ணுதான், உன்னோட மகனைககூபபிட்டு முததம் கொடுக்கச் சொன்னாளா?"

"சொன்னாளோ இல்லையோ, முத்தம் கொடுத்தபோது வேண்டாமுன்னு தடுக்கககூடாதா. சொககிபபோய் நின்னுட்டாளே......"

"சொக்கவுமில்லை, நிக்கவுமில்லை; அய்யோபாவம் இவ்வளவு கெஞ்சிக் கூத்தாடறானே, ஒண்ணு கொடுப்போமனு, 'உம்'னு சொன்னா எனமக......"

அறிஞர்



"உம்னு சொல்லிவிட்டாளேல்லோ, அந்த விநாடியே அவ அவன் பொருளாயிட்டா."

"அடி அம்மாடி! அப்படி ஒரு நியாயம் இருக்குதா......"

"ஏன், என் மகனுக்கு உன் பெண்ணைக் கொடுக்க என்ன கசக்குமா...ராஜாவாட்டம் இல்லையா என் மகன். எங்கேபோய் நீ தேடினாலும் உனக்கு இதுபோல அழகான மாப்பிள்ளை கிடைப்பானா! கேள்டா கண்ணு! மாமி! மாமி! உன் பொண்ணை எனக்குக் கொடுன்னு கேளு..."

"கேட்பானா தைரியமா...என்மக என்ன பொம்மையா. யார் கையிலேயாவது தூக்கிக் கொடுத்துவிட..."

"நீ கொடுக்கறது என்ன! அதோ பார்! அதுகரெண்டும் நம்மைப்பத்தித் துளிக்கூட கவலையில்லாமே விளையாடிகிட்டு இருக்கறதை. ஜோடிப் பொருத்தமாயிட்டுது. இனி நீயும் நானும் தடுத்தாலும் நிற்கவாபோவுது. பேசாம உன் பொண்ணை என் மகனுக்குக் கொடுத்துடு..."

"அப்படியே ஆகட்டும். அதுக இரண்டும் ஆடிப்பாடி சந்தோஷமா இருக்கறதைப் பார்க்கப்பார்க்க கண்கொள்ளாக் காட்சியாத்தான் இருக்குது."

"பேர் என்ன சொன்னே பொண்ணுக்கு......"

"அவபேரா, அரசாளப் பிறந்தவளாச்சே என்மவ; பேரு இந்திரா..."

"என் மவன்பேரு தெரியுமா உனக்கு... அழகேசன்..."

"பொருத்தமான பேருதான்.........வயசு ஏழா?"

"ஆறு வயசு ஆகுது.....உன் மகளுக்கு ஐஞ்சு இருக்குமா."

"அதேதான்...எப்படி அவ்வளவு கணக்காச் சொல்லிவிட்டே..."

"என் மகனுக்கு வாழ்க்கைப்படப்போறவளைப்பத்தி எனக்குப் புரியாமலா போகும். பேச்சு மாறமாட்டயே.....என் மகனுக்கே கொடுக்கணும்..."

"ஆகட்டும்...அப்படியே செய்யறது..."

"வாக்கு கொடுத்தாச்சி, தெரியுதா; தாம்பூலம் மாத்திகிட்டோம்; அப்பாலே வந்து அப்படி இப்படின்னு எதாச்சும் மறுத்துப் பேசினே, என்மகன் இலேசாவிடமாட்டான்."

ஓடிக்கொண்டிருந்த இரயில் நிற்கிறது. பெண்ணைத் தூக்கி இடுப்பில் வைதது்க்கொண்டு, போய் வருவதாகச் சொல்லிவிட்டு, அந்தத்தாய் கீழே இறங்கிக் கொள்கிறாள். மகனிடம் காட்டுகிறாள் அவன் தாய், பெண்ணை, "கண்ணு! நல்லா அடையாளம் பார்த்து வைத்துக்கொள்ளு...உனக்குத்தான் அந்தக் குட்டி.... தெரியுதா...வாக்குக் கொடுத்தாச்சி" என்கிறாள்.

மூன்றாவது வகுப்புப் பெட்டியிலேதானே தம்பி, அடிதடிச் சண்டை முதற்கொண்டு இப்படிப்பட்ட அளவளாவுதல்வரையிலே காணமுடியும்.

யாரோ இரண்டு குடும்பம்; முன்பின் பழக்கமில்லை; இரயிலில் நேசம்; இதிலே இப்படிப்பட்ட பாசப் பேச்சு!!

வருடங்கள் உருண்டோடுகின்றன—இதுபோன்ற எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகளை உருட்டித் தள்ளிவிட்டபடி.

பனிரெண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஓர்நாள்,

கட்டுடல் படைத்த ஒரு காளை ஒரு ஊரில், ஏதோ ஒரு முகவரியைக் கேட்டுத தெரிந்துகொண்டு. அந்த இடம் நோக்கி நடக்கிறான். வீட்டைக் கண்டறிகிறான்; தாளிடப்பட்டிருக்கிறது; தட்டுகிறான்; உள்ளே இருந்து சிறிதளவு நரைதோன்றியுள்ள பருவத்தினளான ஒரு மாது வருகிறார்கள்.

"அன்னம்மாள் வீடு இதுதானே..."

"ஆமாம், நான்தான் அன்னம்...யார்? என்னவேணடும்..."

"இந்திராவோட அம்மா நீங்கதானே..."

"ஆமாம்...என் மகதான் இந்திரா...... நீங்க......?"

"இந்திராவைக் கூப்பிடுங்க..."

"என்னடா தம்பி! முன்பின் பழக்கமில்லாதவன் இப்படிவந்து, ஒரு வயசுவந்த பொண்ணை இங்கே கூப்பிடுன்னு சொல்லலாமா...உலகம் தெரியாத பிள்ளையாயிருக்கறியே...யார் நீ?..."

"விவரம் தெரியாம நான் ஒண்ணும் பேசல்லே, இந்திரா இருக்குதே இந்திரா. உங்கமக அது எனக்காகததான வளருது.... எனக்குத்தான் இந்திரா"

"யார்டா இவன அறிவுகெட்டவனா இருக்கறே, குடிபோதையா, வெறியா...கூப்பிடட்டுமா அக்கம் பக்கத்திலே உள்ளவர்களை. அவ்வளவு திமிர்பிடிச்சா அலையறே...நீ யாரோ எவனோ......என் பொண்ணு உனக்குன்னு பேசறியே—நாக்கைத் துண்டாககிப் போட...நாசமாப்போக"

"ஏம்மா வீணா அலட்டிக்கொள்றே. இப்பப்பேசி என்ன பிரயோஜனம். அது அப்போதே செய்தமுடிவு...பனிரெண்டு வருடத்துக்கு முன்னாலே; இரயிலிலே போகிறபோது. இந்திராவை எனக்கே கொடுக்கறதாக, எங்க அம்மாவிடம் வாக்குக் கொடுத்தாச்சி... சொன்ன சொல்லின்படி நடந்துக்கொள்ளணும்; வாக்கு மாறக்கூடாது..."

“என்னடா இது பெரிய சனியனாப் போச்சி. சந்தேகமில்லாம இவன் ஒரு பைத்யக்காரன்தான். அண்ணாச்சி! கோபாலண்ணாச்சி! கோவிந்தப்பா! பெரியப்பா! ஓடியாங்க...!”

தம்பி! கதையை இந்த அளவோடு நிறுத்திக்கொள்கிறேன், ஏனென்றால் அதற்குமேல் நடைபெற்றவை, அடிதடி, போலீஸ் ஸ்டேஷன், மருத்துவமனை, வழக்கு மன்றம் இப்படி இருக்கிறது. விவரம் புரிகிறதல்லவா உனக்கு. பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு இரயிலில், சிறுவனும் சிறுமியும் விளையாடியது கண்டு பெற்றவர்கள் பேசிக்கொண்டார்களல்லவா, பொழுது போக்காக, அந்தப் பேச்சை அப்படியே தூக்கிவைத்துக்கொண்டு, அப்போதே செய்த முடிவு என்று கூறிக்கொண்டு பித்தமனம்கொண்ட இளைஞன் வந்திருக்கிறான்! கிடைக்கவேண்டியது கிடைத்தது.

இதை ஏன் இப்போது கூறுகிறாய் என்கிறாயா, தம்பி! நான் எந்தக் கதையையாவது காரணமில்லாமல் சொல்வதுண்டா? இதற்கும் காரணம் இருக்கிறது.

சில சூழ்நிலைகளில் ஒருவருக்கொருவர் அளவளாவி மகிழ்ந்திருப்பது இயற்கை. கட்டுக்கடங்காத நேச உணர்ச்சி பொங்கிவழியும் வேளைகள் உண்டு. அந்தச் சந்தர்ப்பங்களில், ஒருவருக்கொருவர் வாக்குக் கொடுத்துக்கொள்வது, பெரும்பாலும் உபசாரத்தின் அடிப்படையிலேதான் அமைந்திருக்கும். அவைகளை ஏதோ மாற்றமுடியாத ஒரு ஒப்பந்தம் என்று எண்ணிக்கொள்வதோ அதன்படிதான் நடந்தாகவேண்டும், மாறவேகூடாது என்று பேச முற்படுவதோ கவைக்கு உதவாது.

ஓடும் இரயிலில், உல்லாச வேளையில், சிறுவன்—சிறுமி விளையாடக்கண்டு மகிழ்ந்து, என் மகனுக்குத்தான் உன் மகள் என்று சொன்னதை, அப்போதே செய்தமுடிவு என்று, ஏதோ ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டதாகக் கருதிக்கொண்டானே கதையில் காணப்படும் இளைஞன், அதுபோல நடந்துகொள்பவர்களும் உண்டா என்று கேட்கிறாய்; நான் என்ன சொல்ல, தம்பி! இருக்கிறார்கள் அப்படிப்பட்ட இயல்பினர்.

ஒருவர் நம் வீட்டுக்கு வருகிறார், விருந்தாளியாக; சிறிதளவு கூச்சமுள்ளவர்; அவரிடம் நாம் உபசாரமாகச் சொல்கிறோம், “ஏன் இவ்வளவு கூச்சம்! இது அன்னியர்வீடு என்று நினைக்கலாமா! இதுவும் உங்கள் வீடுதான்; சொந்த வீடுதான்” என்று. உடனே அந்த ஆள், “அப்படியானால் வீட்டிலே பாதிபாகம் எனக்குத்தானே” என்று வக்கீல்மூலம் நோடீசு கொடுத்தால் எப்படி இருக்கும், அப்போதே செய்தமுடிவு — என்று அவன் வழக்குமன்றத்திலே கூறினால் கைகொட்டியன்றோ சிரிப்பார்கள்.

இதைப்போன்ற வேடிக்கையான நிகழ்ச்சிகள் மட்டுமல்ல, உள்ளபடி இருவரோ, பலரோ கூடி ஒரு ஏற்பாடு செய்துகொள்கிறார்கள் — ஒப்பந்தமே செய்துகொள்கிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம், அந்த ஏற்பாடு கெடுதலாக இருக்கிறது, அந்த ஒப்பந்தம் ஓர் வஞ்சனையாக இருக்கிறது என்று ஒருவருக்கு உணர்வு உண்டானால், செய்துகொண்ட ஏற்பாட்டை எப்படி மறுப்பது, ஏற்பட்டுவிட்ட ஒப்பந்தத்தை எப்படி மாற்றச் சொல்லுவது என்று இருந்துவிடுவார்கள். அன்று இருந்த சூழ்நிலையில் அந்த ஏற்பாடு நியாயம், தேவை என்று கருதினேன், இப்போது ஏற்பட்டுள்ள அனுபவத்தின்படி பார்த்தால் அந்த ஏற்பாடு நியாயமற்றது, தீமைபயப்பது, தேவையற்றது என்று தெரிகிறது, ஆகவே ஒப்பந்தத்தை மாற்றிக்கொள்ளலாம் என்றுதான் கூறுவார்கள். விவாக விடுதலையே சட்ட சம்மத வடிவம் பெறுகிறதே! அவ்விதமிருக்க, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையின்போது செய்துகொண்ட ஏற்பாடு, பிறகோர் நாள் சரியில்லை என்று தெரிகிறபோது, அதனை மாற்றிக்கொள்ள உரிமை இல்லாமலாபோகும்! அவ்விதம் மாற்றவேகூடாது, ஏனென்றால் அது அப்போதே செய்த முடிவு என்று ஒருவர் வாதாடினால், இவர் இரயில் பேச்சை நம்பி, பெண்கேட்கவந்த பித்தனைவிட சற்று உயர்ந்தரகம், ஆனால் கிட்டத்தட்ட அதே போக்கிலே நடந்துகொள்பவர் என்றுதானே பொருள்படும்.

காமராஜர், இந்திதான் ஆட்சிமொழி என்பதை இப்போது இவர்கள் எதிர்க்கிறார்களே, நியாயமா? இந்தி ஆட்சிமொழி என்று இப்போதா புதிதாகச்சொல்லுகிறோம். அது அப்போதே செய்தமுடிவு என்கிறார். அந்தப் பேச்சைக் கேட்டபிறகுதான் தம்பி! எனக்கு இந்தக் கதை நினைவிற்கு வந்தது!!

அப்போதே செய்த முடிவு என்று காமராஜர் கூறுவது எதனை மனதிலேகொண்டு என்பது சரியாக விளக்கப்படவில்லை. காந்தியார் காலத்திலேயே, காங்கிரஸ்கட்சி சுயராஜ்யம்கிடைத்ததும் இந்திதான் ஆட்சி மொழியாகவேண்டும் என்று தீர்மானம் போட்டதைக் குறிப்பிடுகிறார் என்றால், ஒன்று கூறவேண்டி இருக்கிறது,

> காங்கிரஸ் கட்சியின் முடிவு என்பது
> நாடு முழுவதின் முடிவு என்று கொள்ளவும்
> முடியாது, கூறுவது நியாயமுமாகாது.

மற்றும் ஒன்றுகூடச் சொல்லவேண்டி இருக்கிறது, காந்தியார், இந்தியை அல்ல, இந்துஸ்தானியைத்தான் குறிப்பிட்டார், அதுவும் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகக் குறிப்பிட்டார்; நாடு இந்து இந்தியா, முஸ்லீம் இந்தியா என்று இரண்டு ஆகிவிடக்கூடாது என்பதற்காகக் குறிப்பிட்டார்.

அந்த நிலைமை இன்று இல்லை; பாகிஸ்தான் தனி நாடு ஆகிவிட்டது.

இந்தியும் இந்துஸ்தானியும் ஒன்று அல்ல.

இதைச் சொல்லுவதால், இந்திக்குப் பதிலாக இந்துஸ்தானியை வைப்பதானால் ஏற்றுக்கொள்ளத் தயாரா என்று குறைமதியினர் கேட்கத்துடிப்பர்; தம்பி! நான் கூறுவது அதற்கு அல்ல; அப்போதே செய்த முடிவு என்கிறாரே காமராஜர், அந்த “அப்போது” எப்படிப்பட்டது என்பதை விளக்கிக் காட்டினேன்.

காமராஜர், குறிப்பிடும் ‘அப்போது’ என்பது, காந்தியார் காலத்துக் காங்கிரஸ் போட்ட தீர்மானத்தை அல்ல, அரசியல் நிர்ணய சபையிலே நிறைவேற்றப்பட்ட மொழி பற்றிய தீர்மானத்தை என்பார்களானால், அதற்கு நான் கூறக்கூடியவை பல.

முதலாவதாக, அரசியல் நிர்ணய சபை கூடிய சூழ்நிலை, மொழிப் பிரச்சினை பற்றி, ஆர அமர யோசித்துப் பார்த்து, ஒரு நியாயமான, நிரந்தரமாக இருக்கத்தக்க திட்டம் வகுத்திட அமைந்ததல்ல. விழாக்கோலம்! வெள்ளையாட்சியை விரட்டிவிட்டோம் என்ற பெருமித உணர்ச்சி பொங்கி வழிந்து கொண்டிருந்த நேரம்,

இயற்கையிலேயே அமைந்துள்ள வேறுபாடுகள், முரண்பாடுகள், இயல்புகள், நினைப்புகள் எனும் எவை பற்றியும் பேசுவதே தவறு என்று ஒரு தேசீய வேகம் இருந்த வேளை. அந்தச் சூழ்நிலையில், பல்வேறு மொழிகளைத் தாய்மொழியாக, பல ஆயிரம் ஆண்டுகளாகப் பெற்றிருக்கும் மக்களின் எதிர்கால எண்ணம் எப்படி எப்படி உருவெடுக்கும் என்று எண்ணிப் பார்த்திருக்கவே முடியாது. சச்சரவுகள் அறவே கூடாது, சமரசம் எதிலும் வேண்டும், ஒருவருக்கொருவர் தகராறு விளைவித்துக் கொண்டால், வெள்ளையன் சிரிப்பான், உலகம் கேலி செய்யும், ஆகவே ஒன்றுபட்டு இருக்க வேண்டும், ஒருமித்த கருத்து இருப்பதாகக் காட்டியாக வேண்டும் என்ற ஆர்வம் இருந்த நேரம்.

எவ்விதமான பத்தியம் இருந்தாகிலும் நோய் போக்கிக்கொள்ள வேண்டும் என்பது போன்றதோர் நிலை.

> அந்தச் சூழ்நிலையில் பலகோடிக் கணக்கான மக்களின் பிறப்புரிமையைப் பாதிக்கக் கூடிய மொழிப் பிரச்சினை பற்றி ஒரு முடிவு எடுக்க முற்பட்டதே தவறு. அந்தச் சூழ்நிலையில் எடுக்கப்பட்ட முடிவு எந்தெந்தச் சூழ்நிலை மாறி மாறி ஏற்படினும் நிலைத்து நிற்கும் என்று நினைப்பது அறிவுடைமை ஆகாது; நிலைத்து நின்றாக வேண்டும் என்று வாதாடுவது, சகித்துக்கொள்ள முடியாத கொடுமையாகும்.

இதை உணராமல்தான் காமராஜர், 'அப்போதே செய்த முடிவு' என்று வாதாடுகிறார்! வாதாடுகிறாரா? அவர் ஏன் வாதாடப் போகிறார்—தீர்ப்பு அளிக்கிறார்! வரச் சொல்லு இந்திராவை என்று கேட்கிறானே கதையில் வரும் இளைஞன் அதுபோல! கதையிலேவரும் இளைஞன் அடிபடுகிறான், அக்ரமம் பேசுகிறான் என்பதால்; இவர் நாடாளும் பெரியவரல்லவா, இவர், இந்த அக்ரமம் ஏனய்யா என்று கேட்பவர்களை, அடி! உதை! சுடு! என்று உத்திரவு போடுகிறார், பக்தவத்சலனாருக்கு.

அப்போதே செய்த முடிவு என்கிறாரே, அரசியல் நிர்ணய சபை தீர்மானத்தை மனதிலே வைத்துக் கொண்டு, அப்போது செய்யப்பட்ட அரசியல் சட்ட திட்டத்தில், இதுவரை 17 முறை திருத்தங்கள்—மாற்றங்கள் செய்திருக்கிறார்கள்; அப்போதே செய்த முடிவாயிற்றே, அதனை மாற்றலாமா என்று இதே அறிவாளர்கள் கூறவில்லை, \ தயங்கவில்லை; அப்போது சில முடிவுகள் செய்தோம், இப்போது சில மாற்றம் செய்கிறோம், இதிலே என்ன தவறு என்று வாதாடுகிறார்கள்; அதே நேர்த்தியான நாக்கேதான்!!

அப்போதே செய்த முடிவுகள் பலவற்றை இவர்களே இப்போதைய நிலைமைக்காக மாற்றிக் கொள்கின்றனர். ஆனால், அப்போது மொழிபற்றிச் செய்த முடிவு எமது உரிமையை அழிக்கிறது, நிலைமையைக் கெடுக்கிறது என்று பலகோடி மக்கள் முறையிட்டாலும், அறிவாளர் மன்றாடிக் கேட்டுக் கொண்டாலும், ஆர்வமிக்கவர்கள் அதறகாதப் போராடினாலும் அப்போதே செய்த முடிவு, மாற்றமுடியாது என்று பேசுவது, நியாயமாகுமா—நாடு இத்தகைய பிடிவாதத்தைத் தாங்கித் தவித்திடத்தான் வேண்டுமா, தம்பி! இதுதான் நான் கேட்பது.

வாதம் செய்கிறாரே, அப்போதே செய்த முடிவு என்று. அவர் மறுக்க முடியுமா, அப்போதே இதனை வன்மையாகக் கண்டித்தவர்கள், கடுமையாக எசசரிக்கை விடுத்தவர்கள் உண்டு என்பதையும், அவர்கள் ஒவ்வொருவரும் நாட்டு விடுதலைக்காக இவர் அளவுக்கேனும் 'தியாகம்' செய்தவர்களே என்பதனையும்.

> விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளவில்லை. விபரீதம் இது என்று எச்சரித்துவிட்டு பிறகு வருகிறவர்கள் இது பற்றிக் கவனித்துக் கொள்வார்கள் எனற எண்ணத்துடன் ஒப்புதல் அளித்தார்கள் என்பதை மறுக்க முடியுமா!

அரசியல் நிர்ணய சபை நடவடிக்கைக் குறிப்புகள் இதனை நன்றாகத தெளிவுபடுத்துகின்றனவே.

இந்தி பேசாத பகுதியிலிருந்து வந்திருந்தவர்கள் அனைவருமே, இந்தி ஆட்சிமொழி என்ற திட்டத்தைத் தாக்கியிருக்கிறார்கள்; சிலர் மனக்கசபபை வெளிப்படையாகவே எடுத்துக் காட்டியுமுள்ளனரே. அப போதே!! அதனை மறுப்பார்களா, பிடிவாதக்காரர்கள்.

> இன்று போலவே அன்றும், இந்தி பேசும் பகுதியினர் ஒன்று கூடிக்கொண்டு, எண்ணிக்கை பலத்தைக் காட்டி இந்தி பேசாதோரின் வாதங்களை மறுக்க முடியாத நிலையில், கொடுமைப் படுத்தி, இந்தி ஆட்சி மொழி என்ற விதியைப் புகுத்திவிட்டார்களேயன்றி, நாட்டின் பல்வேறு பகுதியினரும் மனமுவந்து இந்தி ஆட்சி மொழி ஆவதை ஏற்றுக்கொண்டனரா? அரசியல் நிர்ணய சபைக் குறிப்புகளைக்காண்போர், அப்போதே எழும்பியிருந்த எதிர்ப்புணர்ச்சியினை நன்கு அறிந்து கொள்ளலாம்.

இவ்வளவையும் மறைத்துவிட்டு, அப்போதே செய்த முடிவு என்று பேசுவது அறமாகாது. ஆனால் ஆளவந்தார்களான பிறகு அறம் தேவையில்லை, பாதுகாப்புச் சட்டம் போதும என்ற துணிவு பிறந்துவிட்டிருக்கிறது என்று எண்ணுகிறேன்.

கொங்கு நாட்டவர், தமிழக மெங்கணும் மதிக்கத் தக்க நிலைபெற்றவர் டி. ஏ. இராமலிங்கம செட்டியார வர்கள், இந்தி மொழியாளரின் இறுமாப்பினை இடித்துக் காட்டி

"விற்பனையாளர்கள் கவனத்திற்கு"

25-7-65-ல் "காஞ்சி" இதழ் வெளிவராதென்பதனைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

1-8-65-ல் ஆண்டுமலர் வெளிவருகிறது.

25-7-65 தேதிக்குள் மலர் தேவையின் எண்ணிக்கை விவரமும், அதற்குரிய முழுத் தொகையையும், ஜூன்மாதம்முடிய பட்டியல் பாக்கி பூராவையும் அனுப்பியவர்களுக்கு மட்டுமே மலர் அனுப்பப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உரிமையாளர்,
'காஞ்சி'

தில்லியிலே நாமேனர் அன்னியன்

போன்ற உணர்ச்சிகொள்ளும்படிச் செய்கின்றனரே, இந்தப் போக்கு எங்கு கொண்டுபோய் விடுமோ என்றெண்ணும் போதே கவலை பீறிட்டுக்கொண்டுவருகிறதே, எதிர்காலத்தில் என்னென்ன ஆபத்துகள் எழுமோ என்றெண்ணும் போதே நடுக்க மெடுக்கிறதே என்று பேசினார்

மராட்டியத்தின் தலைவர் சங்கர் ராவ் இந்தி ஆதிக்க நோக்கம் கொண்டோரைக் கடிந்துரைத்திருக்கிறார்.

பி. தாஸ் அவர்கள், வெள்ளையர்களிடம் கொண்டிருந்தது போன்றதோர் அச்சம் இந்தி மொழியாளரிடம் கொள்ளவேண்டி வந்துவிட்டதே, அத்துணை அகம் பாவத்துடன் அவர்கள் உள்ளனரே என்று குமுறியிருக்கிறார்.

எவ்வளவு படித்தாலும் தென்னாட்டவர், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுடன் சரிசமமான நிலையிலிருந்து போட்டியிட்டு வெற்றி பெற முடியாது என்று எச்சரித்துப்பேசினார் துர்காபாய்அவர்கள (பிறந்த தேஷ் முக்கானவர்)

இந்திப் பிரச்சினையை இப்போது எடுத்துக் கொள்ளவே வேண்டாம், பிறகோர் சமயம் பார்த்துக் கொள்ளலாம்; பிறகு அமையும் பாராளுமன்றம் இதுபற்றி கவனம் செலுத்தட்டும் என்று (இந்நாளைய பாராளுமன்ற துணைத்தலைவர்) கிருஷ்ணமூர்த்திராவ் முறையிட்டுக் கொண்டார்.

இந்த முறையீடுகள், எச்சரிக்கைகள், கண்டனங்கள் யாவையும் 'அப்போதே'தான் இருந்தன. ஆனால் அதனை மறந்துவிடச் சொல்லுகிறார்கள் போலும்.

அப்போதே முடிவு செய்ததாகக் கூறுகிறார்களே, அதேபோது எழுந்த எதிர்ப்பு, நாளுக்குநாள் வளர்ந்தது; குறையவில்லை.

அரசியல் நிர்ணயசபை கூடியபோது, இந்தப் பிரச்சினையில் போதுமான அக்கரை காட்டாமலிருந்தவர்கள்கூட, பிறகு இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய பேராபத்தினை உணரத் தலைப்பட்டனர்; இந்திக்கு எதிர்ப்பு வலுவடைந்தது. பரவிற்று.

டாக்டர் சுப்பராயன், இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கும் கதைபோலிருக்கிறதே இந்திக்காரர் போக்கு என்று இடித்துரைத்தார்.

இந்தியாவுக்கு ஒரே ஒரு மொழிதான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும், என்று கருதுவதே அறிவீனம் என்று வங்க முதல்வர் பி. சி ராய் முழக்கமிட்டார். இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஒரு இயக்கமே உருவெடுத்துவிட்டது. இந்தியைக் கட்டாய பாடமாக்கி, வெற்றி கிட்டாததைக் கண்ட ராஜகோபாலாச்சாரியார் இந்தி எதிர்ப்பில் முன்னணி நின்றிடலானார்.

அப்போதே செய்த முடிவுக்கு இப்போது இவ்வளவு எதிர்ப்பு பல முனைகளிலுமிருந்து கிளம்பிவிட்டிருக்க, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அறப்போர் நடாத்தி இன்னுயிரையும் இழந்திடும் உறுதி ஓங்கி வளர்ந்திருக்க, காமராஜர் இப்போது, 'அப்போதே செய்த முடிவு' என்று பேசுவதிலே பொருளுமில்லை, பொருத்தமுமில்லை.

அப்போதே செய்த முடிவு பற்றிப் பேசிடும் காமராஜருக்கு ஒரு கேள்வி—அப்போது செய்த முடிவுகளின்படியா இப்போது அவருடைய கட்சியினர் — மிகப் பெரியவர்கள்கூட — நடந்துகொள்கிறார்கள். நானும் "அப்போது செய்த முடிவுகள்' சிலவற்றைக் காமராஜருக்குக் கவனப்படுத்தலாமா!

"அப்போதே செய்த முடிவு-மதுவிலக்கு! சட்டமும் செய்தாயிற்று. அப்போதே செய்த அந்த முடிவு இப்போது எந்தக் கதி அடைந்திருக்கிறது.

கேரளாவில் கள்ளுக் கடை!

மராட்டியத்தில் பீர் கடை!

புதுவை காரைக்காலில் சாராயக் கடை!

டில்லியில் குடிப்பதற்கென குறிப்பிட்ட நாட்கள்!!

இவ்விதம் மதுவிலக்கு கேலிக்கூத்தாக்கப்பட்டிருக்கிறதே!

வெட்கப்படுகிறாரா, காமராஜர்! வெகுண்டெழுந்து 'அப்போதே செய்த முடிவு' மதுவிலக்கு, அதனை இப்போது மாற்றும்படிச் சொல்ல யாருக்கும் உரிமை இல்லை என்று முழக்கம் எழுப்புகிறாரா! அடியோடு மறந்துவிடுகிறாரே; "அப்போது செய்த முடிவு" பற்றி. நியாயமா!

அசோக்மேத்தா அச்சம் கூச்சமின்றிக் கூறுகிறார், மதுவிலக்கு திட்டத்தை ஒழித்து விடுங்கள். ஆண்டுக்கு 400 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று!

'அப்போதே செய்த முடிவு' மதுவிலக்கு, அதனை மாற்றும்படிச் சொல்வது கூடாது என்று இந்தக் காமராஜர் அசோக்மேத்தாவைப் பார்த்துச் சொல்கிறாரா! அந்தத் துணிவு இருக்கிறதா!! இல்லையே! இந்தி விஷயமாக மட்டுந்தானா, அப்போதே செய்த முடிவு பற்றிய வீராப்பு! மற்றவற்றுக்கு?

மற்றோர் 'அப்போதே' கூட இருக்கிறது, நினைவிற்குக் கொண்டுவர!

அப்போதே செய்த முடிவு காங்கிரஸ் அமைச்சர்கள் மாதம் 500 ரூபாய் மட்டுமே சம்பளம் பெறவேண்டும் என்று! என்பது ஆயிற்று அந்த 'அப்போது'? மகாத்மாவின் ஆசீர்வாதம் பெற்று அப்போதே செய்த முடிவாயிற்றே, அதற்குக் கட்டுப்பட்டு நடந்திடவேண்டும் என்ற கடமை உணர்ச்சி இருந்ததா காங்கிரசின் பெரிய தலைவர்களுக்கு?

கராச்சி காங்கிரசில் 'அப்போதே' செய்த முடிவு—மாதம் 500! இப்போது இந்தி விஷயமாக அப்போதே செய்த முடிவு பற்றிப் பேச அகன்ற வாய் திறந்திடும் அறிவாளர், அப்போது செய்த முடிவை மதித்தாரா! இவர் வரையிலாகிலும்!! இல்லையே!! அப்போதே செய்த முடிவைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டு, மாதம் 1000, 1500 என்று சம்பளம் பெற்றுக் கொள்ளத் துணிந்தனர். 'அப்போது' என்ன ஆயிற்று.

ஆகவே அப்போதே செய்த முடிவு என்று பேசுவது அர்த்தமற்றது மட்டுமல்ல அக்ரமமானது.

எப்போது செய்யப்பட்ட முடிவாக இருப்பினும், மக்களின் கருத்து வழி நின்று முடிவுகளை மாற்றிக் கொள்வது, திட்டங்களைத் திருத்தி அமைப்பது, ஜனநாயகக் கடமை. ஜனநாயகத்துக்கு விழா கொண்டாடிக்கொண்டே, ஜனநாயகத்தைப் பழித்திடும் பாதகத்தினைச் செய்வதிலே சுவை காண்கின்றனர்.

இவர்தம் பொறுப்பற்ற பேச்சினையும் அகம்பாவப் போக்கினையும் மாற்றிட வழி என்ன? கடுமையாகத் தாக்குவதா! இழித்தும் பழித்தும் பேசுவதா! இல்லை, இல்லை! அஃதல்ல நாம் மேற்கொள்ளவேண்டிய முறை.

தம்பி! கடுமொழியும் கனல்கக்கும்பேச்சும் பேசின பலர் என்னுடன் இருந்தனர் — ஏ! அப்பா! இந்த இந்தி விஷயமாகவும், அதனைப் புகுத்திடத் துணைசெய்யும் காங்கிரஸ் தலைவர்களையும் என்னென்ன கூறினர், எத்துணைக் கடுமையாகத் தாக்கினர்! கேட்பவர் இரத்தம் கொதித்திடும் விதமாக! எங்குளார் அவரெலாம்!! இந்தியின் காலடி தொழுதிடும் இடத்தில்!! ஏன்? அவர் அங்கு காணும் சுகம் யாதோ, எங்ஙனம் நான் அறிந்திட இயலும்.

ஒன்றுமட்டும் தெரியும் எனக்கு—துள்ளும் மாடு பொதிசுமப்பதில்லை — தூற்றித்திரிவோர் எந்த முனையிலும் நிலைத்து நிற்பதில்லை.

இந்தியை எதிர்க்கும்போது, நாம், தம்பி! இழிமொழியால் எவரையும் தாக்கத் தேவையில்லை. தமிழ் அத்தகைய தகாத செயலுக்குப் பயன்படுதல் கூடாது. நமது உள்ளத்தைத்திறந்துகாட்ட, உறுதியை வெளிப்படுத்தவே, தமிழ் பயன்படுத்தப்படுதல்வேண்டும்.

எம்முறையில் பணியாற்றி இந்தி ஆதிக்கத்தினை ஒழித்திடவேண்டும் என்பதிலே நமது நோக்கம் செல்லவேண்டுமே யன்றி இழிமொழியை எத்தனை வேகத்துடன் பொழிந்து நமது எரிச்சலைக் காட்டிக்கொள்ளலாம் என்பதிலே செல்லுதல் கூடாது.

தென்னவர் இந்தி கற்கச்
செப்புவோன் தமிழனல்லன்
அன்னையை வடவர்கூடி
ஆக்கிய கருவே அன்னான்!

எப்படித் தம்பி! இருக்கிறது, இந்தத் தாக்குதல்! இப்படியல்லவா சம்மட்டி அடி கொடுக்கவேண்டும் என்று பக்குவமற்றோர் பாராட்டுவர். ஆனால் இத்தனைத் துணிவுடன் இந்தியைத் தாக்கினோர் — இந்தியையா, இந்தி ஆதரவாளர்களை-இன்று எங்கு உளர்! இந்தி, கெக்கலி செய்கிறது! இந்தி ஆதரவாளர் கூறுகின்றனர், அந்த நாவுக்கரசர்கள் நம்மிடம் அடைக்கலமாயினர் என்று.

தம்பி! இந்தி மொழியை நீயும் நானும், இலக்கண வரம்பற்ற மொழி, இலக்கிய வளமற்றமொழி, நேற்றுப் பிறந்த மொழி என்று மட்டுந்தானே கூறுகின்றோம். இந்தியும் இந்தியாவின் ஒரு பகுதியினரின் தாய்மொழி ஆகவே அம்மொழியை இழித்துரைப்பது அம்மொழியாளரின் மனதினைப் புண்ணாக்கும் என்று எண்ணுகின்றோம்.

இது அல்ல போர்முறை! இஃதன்று வீரம்! தாக்கவேண்டும், தாக்கவேண்டும், அவர்கள் தமது நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகும் விதமாக என்றுகூறிச் சிலர் இந்தியைத் தாக்கினர்:

வங்காள நாயகனை ஓடிப்பிடித்தாய்!
மராட்டி ஆடவனின் கூடப்படுத்தாய்!
எங்கேனும் யாரேனும் கைகாட்டினாலும்
எப்போதும் செயலாகும் தப்பாத கற்பின்
பங்காளியன்றோ? உன் பட்டாடையெல்லாம்
பல்லோரும் தொட்டாண்ட புத்தாடையன்றோ?
வங்காளம் மாராட்டி எல்லாமிப்போது
வாலாட்டும் உன் வாழ்வை வீழ்த்தல்தப்பாது-

ஆமாம் தம்பி! பொறி பறக்கிறதல்லவா!! பறந்தது! பறந்தேபோயினர்! புதிய பிறவிகளாயினர்-பிறவிகளா? —புதிய தொழிலினை மேற்கொண்டுவிட்டனர்.

எனவேதான், தம்பி! கடுமொழி பேசிடுவோர் குறித்து நான சற்று கண் விழிப்புடன் இருந்திடவேண்டும் என்பது

பொங்கி வழிந்திடும், நெடுந்தூரம் நெடிபரப்பிடும் கள் — பால் அல்ல!

வீரன், தாங்கிக்கொள்ள அறிந்தவன், தாக்கும் முறையிலும் ஒரு தரம், வரம்பு, இவைகட்குக் கட்டுப்படுபவன் — மேலே வீழ்ந்து கடித்துக் குதறிடுபவன் அல்ல.

முழக்கம்! ஆணையிடுக் கூறல்! சூள் உரைத்தல்! — கொஞ்சமா!! இந்தியை ஒழித்திடாமல் இருப்பேனா— அதனை எவர் செய்திடத் தவறிடினும், நானே அப்பணியினை மேற்கொள்வேன், பகை வெல்வேன் என்று உரத்த குரலெழுப்பி கேட்போர் உள்ளத்தை, உலுக்கினர்! உருமாறிப் போயினர் இன்று!!

இழி செருப்பனைய இந்தியைக் காலில்
இட்டழித் தொருதுகள் எடுத்து
விழி குருடான கொடியவர் முகத்தில்
விட்டெறி வேனிதும் உண்மை!
கழிபெரும் உவகை கனித் தமிழ் மொழியில்
காணுவன் காணுவன் உண்மை!
அழிவதென்றாலும் இந்தியை அழித்தே
அழிவன் நான்! உண்மையினுண்மை!

தம்பி! நான் உன்னிடமிருந்து இத்தகைய 'வாணங்களை' எதிர்பார்க்கவில்லை! இடியோசை அல்ல நான் விரும்புவது — உன இதயத்தை!!

'அப்போதே செய்த முடிவு' என்று பேசிடும் காமராஜரின் வாதத்தின் பொருளற்ற தன்மையினை நாடு அறிந்திடச் செய்திடு, நாம் மேற்கொண்டுள்ள இந்தி ஆதிக்க ஒழிப்புத் திட்டத்துக்கு நாட்டினரின் நல்லாதரவு உண்டு என்பதனை உலகறியச் செய்திடு. அதற்கான பொன்னான வாய்ப்பாகப் பொதுத் தேர்தல் வருகிறது. பொறுப்புடனும், பொறுமையுடனும், பணியாற்றி வெற்றி தேடித் தந்திடு! உன்னையல்லால் வேறு எவருளர் இச்செயலை முடித்திட!

அண்ணன்,

அண்ணாதுரை



தும்பைப்பூ

எஸ். எஸ். தென்னரசு

5

செண்பகஞ் சேர்வை சிகிச்சை முடிந்து வீடுதிரும்பிவிட்டான் ஆனுல் திண்ணுயிரம்? அன்று போனவன் தான்! மறுபடி தலைகாட்டவே இல்லை. அந்த இரண்டு நாட்களும் எதற்காக வந்தான்?

திண்ணுயிரத்தை நினைக்கும் போதெல்லாம் குருவம்மாவுக்குத் தலை சுற்றியது "அந்தப் பாவி வந்துட்டுப் போனது அப்பாவுக்குத் தெரிஞ்சா அவர் மனம் என்ன பாடுபடும்?" குருவம்மாவின் நெஞ்சம் அடிக்கடி குறுகுறுத்தது.

"ஏன் குருவம்மா, ஏது இந்தப் பொடவை?"

"அதுவாப்பா ...... அது முந்தியே எடுத்ததுதானே! பொட்டிக்குள்ளேயே இருந்துச்சு ...... அதுனலே உங்களுக்குத் தெரியல்லே!" குருவம்மா எப்படியோ பதில் சொல்லிவிட்டு புலிவாயிலிருந்து தப்பித்தவளைப்போல பெருமூச்சு விட்டாள்.

இப்போது வாசலில் தபால்காரன் வந்து நின்ருன்.

குருவம்மா இருக்காங்களா?" "என்ன சீவனும்சப் பணம் வந்திருக்காக்கும்...குருவம்மா போய் கையெழுத்துப் போட்டு வாங்கிட்டு வாம்மா" —செண்பகத்தின் முகத்தில் எந்த அறிகுறியும் தெரியவில்லை.

ஆனுல் குருவம்மா—

"ஏம்பா, எதுக்கு இந்தப் பணம்? இதை வாங்கினுததான் நான் ஒழுங்கா இருப்பேனுக்கும்! அவருதான எம் புருஷனு மனசிலே எழுதியாச்சு; யாரேலேயும் அதை அழிக்க முடியாது பினனே எதுக்காக நாம இதை வாங்கிக்கனும்?" என்று கேட்டுவிட்டாளே!

அதற்குச் செண்பகம் —

'இந்தப் பணம் வந்துதானு நாம சாப்புட்டுக்கிட்டு இருக்கோம்? ஒரு முறைக்காசத்தான் ஒனனை வாங்கச் சொல்றேன்; என்ன முறை? பணததை வேணும்னு சொல்லிட்டா ஊரிலே என்ன சொல்லுவாங்க தெரியுமா? கழுதை கட்டவுத்துக்கிட்டு ஓடப் பாக்குது போலேயிருக்கு, அதான் சீவனும்சப் பணத்தை வாங்கமாட்டேங்குதுங்க — அப்டின்னு! தூத்துவாங்க' என்று பதில் சொனனுன.

செண்பகத்தின் பதிலில் ஏதோ கொஞ்சம நியாயம இருப்பதாக குருவமமா உணர்ந்தாள். ஐமபது ரூபாயை வாங்கிவந்து எபபோதுமபோல் செண்பகததிடம் கொடுத்து விட்டாள்.

✱

இரண்டு மாதங்களுக்குப் பின் செட்டிநாட்டிலிருநது. ஒரு கோபுர வேலைக்காகச் செணபகத்தை அழைத்திருந்தார்கள். இருபது நாட்கள் அவன் அங்கு தங்கியிருந்துவிட்டு வநதான். வரும்போது குருவம்மாவுக்கு புதுப்புடவை, கோயில் திருநீறு துளசி எல்லாம் கொணடுவந்தான.

"குருவம்மா! குருவம்மா?" வாசலில் நினறுகூப்பிட்டான் செண்பகம.

'வந்திட்டேன்!" என்று கூவிக்கொண்டு குருவம்மா கதவைத் திறந்தாள்,

அவளைப் பார்த்ததும் செண்பகத்திற்கு ஒரே திகைப்பு அனல் காற்றுப பட்டதுபோல அவா முகததைச் சுளித்தார் உடனே புகையடிதத புதுச்சுவர் போல் அவர் முகம் கருத்துவிட்டது. ஏன் அப்படி மாறியது?

செண்பகம் எதையோ அவளிடம் கேட்க வாயெடுத்தான். ஆனுல் கேட்கவில்லை எல்லாவற்றையும் எல்லோரிடத்திலும கேட்டுவிட முடியுமா? தமிழ் நாட்டில் வாழ்க்கைக்கே இலக்கணமிருக்கிறதே! தந்தை மகளிடம் எதைப் பேசலாம்; எதைப் பேசக் கூடாது; மாமனுரிடத்தில் பேசும் போது மருமகள் எவ்வளவுதூரம் தள்ளிநின்று பேசவேண்டும்;மருமகன் வரும்போது மாமியார் எதிரே இருக்கலாமா? — இப்படிப்பட்ட விதிமுறையில் ஊறிப்போன தமிழக் குடும்பத்தின் தலைவன செணபகம சேர்வை. அவன சொந்த மகளிடத்தில—'என்னம்மா உன் முகம் சோகை பற்றி கர்ப்பக் குறி காட்டுகிறதே' என்று கேட்டுவிட முடியுமா? ஆம்; குருவம்மாவின தோற்றம் மாறித்தான் போயிருந்தது. அவளது முகம் வெளுத்து கண்கள் கிளியின் கண்களைப்போல சிறுதது மேனியெல்லாம் மஞ்சள் பூதது நீர்க் கோர்த்துக் காணபட்டது

சேர்வையின் மனம் படபடத்தது கெட்ட கனவு கண்ட ஊமையைப் போல் களத்திலே கரத்தை இழந்த வனைப்போல செண்பகம் தவித்தான்.

"என் மகள் குருவம்மா தங்கமகள் பொன்னொளியாள என்று பேர் வாங்கியவளாயிறறே! அவளா இப்படி இருக்கிறாள்? சே! நான் முட்டாள்; ஏதோ அவளுக்கு உடம்புக் கோளாறு அவ்வளவுதான்!" என்று மனச்சாந்தி செய்துகொண்ட செண்பகம்.

"குருவம்மா!" என்று அழைத்தான்.

"என்னப்பா!" தளளி நின்றேபேசினாள் குருவமமா

"ஏம்மா, உடம்புக்கு என்ன? முகமெல்லாம் வெளுத்திருக்குதே! ஆஸ்பத்திரியிலே காட்ட வேணுமா?"

"எனக்கு ஒண்ணுமில்லேயப்பா! சின்னப் பிளளையிலே யிருந்து பாக்குத் தின்னது இப்பத்தான் தொல்லைப் படுத்துது!" என்றாள் குருவம்மா, ஆனால் அவள் மனததுள அபபாவின் அகனிக் கோபத்துககு இலக்காகும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறதே என்று நினைக்காமல் இல்லை,

✽

செண்பகத்தின் மேற்பார்வையில் அழகாரடியில் ஒரு கட்டிட வேலை நடந்துகொண்டிருந்தது. காலையில் போனால் மாலையிலதான திருமபுவான சேர்வை,

செண்பகம் அன்று காலையில் வீட்டை விடடு புறபபட்டு அம்மன் சன்னதி அருகே வந்து கொண்டிருக்கும்போது பககத்தில் ஒரு துணிக் கடையிலிருந்து யாரோ ஐயா' எனறு கூபபிடுவதுபோல இருந்தது. சேர்வை திருமபினான. வாடிக்கையாக வடடுக்குத் தயிர் ஊற்றும் தயிர்க்காரி அவனருகே வந்தாள.

"என்னம்மா இங்கே நிக்கிறே?"

"துணி எடுக்கவந்தேன...அய்யா கிட்டே கொஞ்சம் பேசலாமனு நெனைச்சேன். மீனாட்சியம்மனைப பார்த்து ஒங்களை இங்கே கொணடாந்திருச்சு!.....கோவுசுக்கப்படாது நீஙக...குருவமமா முகக்குறி ஒரு மாதிரியா இருக்கு...எனக்கு ரெணடு மாசமா ஒரு சந்தேகமுங்க...நீங்க ஆஸ்பத்திரியிலே இருந்தப்போ வீடலே பூவாடையும் பத்திவாடையும் கமகமத்துச்சு...நான் ஒரு நாளு கருக்கில்லே போய்ட்டேன்...வீட்லே ஒரு பழக்கூடை இருந்துச்சு, பாயிலே மல்லிப்பூ கொட்டிக்கெடந்ததைப் பாத்தேன...காலாகாலத்திலே ஆகவேண்டியதைப் பாருங்க......எனக்கென்னமோ புடுச்சுககல்லே. நீங்க எனக்கு அப்பன்மாதிரி. அதாலேதான் சொன்னேன்."

ஏற்கனவே செண்பகத்தின் மனத்தில் படிந்திருந்த ரேகைக்கு உருவம் கொடுத்துவிட்டாள் தயிர்க்காரி,

செண்பகத்தின் உடல் கலகலத்து விடடது ரத்தமெல்லாம் உருகி நீராக ஓடிவிட்டதுபோல் அவனுக்கொரு நினைபபு.

"நீதான் இப்ப எனக்குக் காவல் தெய்வம்!.... ,இதுக்கு மேலே என்ன சொல்றதுன்னே எனக்குப் புலப்படல்லே.." செண்பகம் சோர்ந்து விடடான. பாதிக்கப்படும்போது அலலது பலவீனமடையுமபோது மனிதன் கொள்ளைக் கூட்டத்தினாிடம் சிக்கிக் கொண்டவனைப்போலபயந்து கெஞ்ச ஆரம்பித்துவிடுகிறான்

"நீங்க சொல்றது எனக்குப் புரியுதய்யா., எந்தலை போனாலும் நான் வெளியே சொல்லமாட்டேன்" என்றாள தயிர்க்காரி.

உடைந்த உள்ளத்துடன் செண்பகம் வீடு திருமபினான். ஆனால் அவன் வீட்டை நெருங்கியபோது அவனுக்கொரு குழப்பம!

"வீட்டுக்குள்போய் என்ன செய்வது? குருவமமாவை எனன கேட்பது எப்படிக கேட்பது? ஒன்றும கேடக வேண்டியதிலலை. இரவுவரை எப்போதும்போல் சந்தோஷமாகப் பேசிக்கொண்டே இருந்துவிட்டு இரவுச் சாப்பாட்டில் நஞ்சைப் போடடுக் கொனறுவிடடால் எனன? அதுதான் சரியான யோசனை—என்று நினைதத செண்பகம மறுபடியும கடைககு வந்து ஒருபுட்டி மூடடைப்பூசசி மருந்தை வாஙகிக்கொணடுபோனான.

"குருவம்மா?"

"குருவம்மா?"

அவள் இருந்தால்தானே பதில் பேசுவதற்கு?

வீடு வெரிச்சோடிப்போய் இருந்தது. செண்பகமும அவனது மனைவி சக்குவும் இளமபிராயத்தில சேர்ந்திருந்து எடுதத புகைப்படம் ஒனறு வெகுகாலமாக ஒரு அறையில வீட்டில மாடடிககிடந்தது. அந்த அறையைக கோயில் வீடு என்றுதான் வீட்டில் எல்லோரும சொல்லுவார்கள். அந்த அறைக்குள கிடந்த பெற்றோர்களின் படததில் ஒரு பூமாலை தொஙகியது.

செண்பகம் சிலைபோல் நின்றான். கொலை நடந்த வீடடில் துப்பறியும் அதிகாரி நோடடம் விடுவதுபோல் செண்பகம் மேலுமகீழுமாகப் பார்தத படி நடந்தான்.

✽

இது மஙகம்மா சத்திரம்! பெயர் தான சத்திரமே தவிர அதில் யாரும் இலவசமாகத தங்கிவிட முடியாது, ரயி[illegible] விட்டிறங்கும் புது முகஙகளு[illegible]க [illegible]திாபபில் தோற்றமளிபபது மஙகமமா சததிரம்தான். இப்போது அது ந[illegible]ன வாய்ப்புகள் கொண்ட ஒரு லாட்ஜாகி விட்டது.

இராமநாதபுர மாவட்டத்திலுள்ள ஒரு சிறறூாில விடிய விடிய நாடகமாடிவிடடு மதுரவல்லி அப்போது தான காரில் வநதிறஙகினாள். சததிரததில அவளுக்கென ஒரு அறை காலி செய்யப பட்டிருந்தது.

அண்ணாவின் கருத்தோவியங்கள்

பாவையின் பயணம் விலை 1.50
அரசாண்ட ஆண்டி " 1.50
மதுரைக்கு டிக்கெட் இல்லை " 2.00

கிடைக்குமிடம் :

பரிமளம் பதிப்பகம் ◆ சின்னகாஞ்சீபுரம்.

JAYA

மதுரவல்லியோடு திண்ணையிரம் வந்தான். இருவருமாக அந்தத்தனி அறைக்குப் போனார்கள்.

சத்திரத்து மானேஜர் கூட்டுக்காரியை அழைத்து திண்ணையிரத்தின் அறையைச் சுத்தப்படுத்தி படுக்கைகளை உதறிச் சரியாக விரிக்கச்சொன்னார்.

வேலைக்காரி கூட்டுமாறுடன் அந்த அறைக்குள் நுழைந்தாள். உள்ளே, முதல்நாள் நாடகத்திற்காக இறுக்கப் பின்னிக் கட்டியிருந்த மதுரவல்லியின் பொய்ச் சடையை திண்ணையிரம் அவிழ்த்துக் கொண்டிருந்தான். மதுரவல்லி அவன் மடியில் சாய்ந்தபடி கண்ணுறங்கினாள்.

"சை! நீர் ஒரு [illegible] கொண்டவளைக் கூட்டுக்காரியா [illegible] கண்டவளோடு [illegible] அவளைக் [illegible] புரியலையா? இது [illegible] செய்கிற வேலை...?' என்று [illegible] கண்ணில் [illegible] அவளுக்கு [illegible] [illegible]

[illegible] நீயா?"

— கூட்டுக்காரியை [illegible] திண்ணையிரம் [illegible] திக்குமுக்காடினான் [illegible] நாமவில்லை மதுரவல்லி விரித்துக் கொண்டாள்.

"ஏண்டி கூலிக்காரக் கழுதே! புருஷன் மனைவி தனியா இருக்கிற அறைக்கு வரலாமா?" மதுரவல்லி எரிந்து விழுந்தாள்.

"மதுரவல்லி!" திண்ணையிரம் கத்தினான்.

"ஏன் கத்துறீங்க! இவ யாரு? உங்களுக்குத் தெரியுமா?"

"சீ! இவ யாரோ! நீ தூங்கு! உடம்பு கெட்டுப் போகப் போவுது!"

வாக்கு வாதம் முற்றிவிட்டது. சத்திரத்து மானேஜர் ஓடிவந்தார்.

"ஏம்மா ஒன்னை வேலைக்கு சேக்கும்போதே சொன்னேனே! இப்படியெல்லாம் வருமின்னு எனக்குத் தெரியும்... சரி நீ உள்ளேபோ" என்றார் மானேஜர்.

"ஓ... ஹோ! இப்படியா சங்கதி! மதுரவல்லி, புறப்படு! இந்த இடம் நமக்கு ஒத்துவராது! இந்தாங்க வாடகை!" என்று பணத்தைக் கொடுத்துவிட்டு இருவரும் வெளியேறினார்கள். அவர்கள் போன பிறகு,

குருவம்மா! என்று கூப்பிட்டார் மானேஜர்.

"என்னங்கய்யா!" என்று கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வந்து நின்றாள் குருவம்மா.

"ஏன் அந்த அறையில் அப்படி நடந்து கொண்டாய்?"

"அவருதான் என் புருஷனுங்க; என்னை இப்படி துடியாத் துடிக்க வச்சுப்பிட்டு கும்மாளம் போடுறாரு" என்றாள்.

மானேஜர் எதிர்பார்க்கவே இல்லை கதை இப்படித் திரும்புமென்று. அன்றிலிருந்து குருவம்மா மீது மானேஜருக்கு ஒரு இரக்கம் பிறந்துவிட்டது. அவருக்கு வரும் வீட்டுச் சாப்பாட்டில் ஒரு பகுதியைக் குருவம்மாவுக்குக் கொடுத்தார்.

❀

மங்கம்மா சத்திரத்தின் முகவரியிட்டு குருவம்மாளுக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதமல்ல அது; திண்ணையிரத்தின் வக்கீல் விடுத்த முன்னறிவிப்பு. அதில்

'எனது கட்சிக்காரராகிய திண்ணையிரத்திடம் மாதம் ஐம்பது ரூபாய் ஜீவனாம்சப் பணம் பெற்றுக் கொண்டு

வரும் நீ. எனது கட்சிக்காரர் மனம் புண்படும்படி நெறி தவறி நடந்து கருவுற்றிருக்கிருய். ஆகையால் எனது கட்சிக்காரர் ஏன் உன்னை விவாகரத்து செய்துகொள்ளக் கூடாது என்பதற்கான பதிலை இன்னும் பத்து நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டியது." — என்று குறிப்பிடப் பட்டிருந்தது.

குருவம்மாவுக்குத் தற்கொலை செய்துகொள்வதைத் தவிர வேறுவழி தோன்றவில்லை. திண்ணயிரம் வீடு தேடிவந்தது தன்னை மன்னித்துக் கொள்ள மன்ருடியது எல்லாம் திட்டமிடப்பட்ட சதி என்று அவள் அறிந்தாள்.

"நான் ஏன் சாகவேண்டும்? நான் கெட்டுப்போனவளா? புருஷனுக்கு துரோகம்செய்தவளா? சாகக்கூடாது! செத்துவிட்டால் குருவம்மா நித்தை கெட்டவள்தான் என்று முடிவாகி விடும். யாருக்காக வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும் என் அப்பாவுக்காக நான் வாழ்ந்தே தீரவேண்டும் அவர் கண்களை மூடுவதற்குள் என் மகள் தும்பைப்பூதான் என்று அவர் சொல்லிச் சாகவேண்டும்! குழந்தைதான் பிறக்கட்டுமே! மீனாட்சிமட்டும் கருணை வைத்து எனக்கு ஆண் குழந்தை கொடுக்கட்டும்; மங்கம்மாமாதிரி அவனைவிட்டே பெற்ற அப்பனை மார் தட்டி அழைக்கவைக்கிறேன்"

—குருவம்மாவின் நெஞ்சு கொதித்தது. சத்திரத்து மானேஜர் அவளுக்கு ஆறுதல் சொன்னர். வழக்கு மீண்டும் மன்றத்திற்கு வந்தது திண்ணபிரம் தான் யாரும் அறியாத வேளையில் வந்து இச்சகம்பேசி குருவம்மாவைக் கெடுத்துவிட்டுப் போய்விட்டான் என்பதற்குப் போதிய சாட்சியங்கள் இல்லை என்று கூறி நீதிபதி ஜீவனும்சப் பணத்தைத் தள்ளுபடி செய்து விட்டார். நிலைக்கண்ணடி தெறித்து விட்டால் முகம் ஒழுங்காகத் தெரியுமோ' விவாகரத்தும்நடந்துவிட்டது ஆனல் கழுத்தில் கிடந்த தாலி? தெரிந்த ஊர், தெரியாத ஊர் எங்கே போனலும் ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பாக இருப்பது தாலிதானே' புலியிடமிருந்து மான் கூடத் தப்பிக்கலாம், ஆனல் தரித்திரத்தில் உழலும் தாலியில்லாத பெண் அவதூறுகளிலிருந்து தப்பிக்க முடியுமா' குருவம்மா அதற்காகவா தாலியை அகற்ருமல் இருந்தாள்? தாலி கட்டினவனுக்குத் துரோகம் செய்திருந்தால்தானே அவன் தாலியைக் கழற்றுவாள்! சட்டப்படி நீதிமன்றத்தில் தாலியை அவிழ்த்துப்போட்டுவிட்டு ஒரு நூலில் மஞ்சளைக் கோத்துக் கழுத்தில் கட்டிக்கொண்டுவிட்டாள்.

●

ஆறு மாதங்களுக்குப்பின் ஒரு நாள் சத்திரத்து மானேஜர் செண்பகஞ்சேர்வை வீட்டுக்குப்போய் அவரிடம் குருவம்மாவுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கும் தகவலைச் சொன்ஞர் செண்பகம் நெருப்பாக இருந்தான்.

"நீங்கள் நினைக்கிறபடி இல்லை' உங்கள் மருமகன் ஒரு கடைந்தெடுத்த அயோக்கியன் அவன்தான் கிட்டும்போட்டு காரியத்தை நடத்தியிருக்கிறன்" என்ருர் மானேஜர்.

'அவகெடச்சிரு! அவளுக்கும் எனக்கும் ஒண்ணுமில்லே' நீங்க யாரு? எதுக்காக இதிலே நீங்க தலையிடனும்?" செண்பகம் கேட்டான்.

"நானு? நான் மங்கம்மா சத்திரத்து மானேஜர். குருவம்மா எங்க சத்திரத்தில்தான் கூட்டுவேலை பார்த்து வருகிறள் சென்ற வாரம்தான் பிரசவத்துக்காக அவளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினேம் நேற்றுக் காலைதான் குழந்தை பிறந்ததாம்" என்ருர் மானேஜர்.

"குழந்தை பிறந்தா அதைக் குப்பைத் தொட்டியிலே தூக்கிப் போடச் சொல்லுங்க!" என்று கடுகடுப்பாகப் பேசி அனுப்பிவிட்டான்.

அன்றிலிருந்து செண்பகத்திற்குத் தெருவில் நடக்கவே பயம்! வெட்கம்! யாராவது சந்தித்து. 'என்ன பேத்தி பிறந்திருக்கிருளாமே' என்று கேட்டுவிட்டால் என்ன செய்வது? அதற்காகவே செண்பகம் அதிகமாக வெளியில் நடமாடாமல் இருந்தான். ஆனல் ஒருநாள் அவர் பயந்தது நடந்துவிட்டது.

செண்பகம் மீனாட்சியம்மன் கோயிலுக்குள்ளிருந்து அப்போதுதான் வெளியேறினன். அந்த நேரத்தில் சத்திரத்து மானேஜர் கோயிலுக்குள் நுழைந்தார்.

"அர்ச்சனை செய்துகொண்டு போகிறீர்களாக்கும்!" மானேஜரே பேச்சைத் தொடுத்தார்.

செண்பகம் காது கேட்காதவன் போல் நடந்தான்.

மானேஜர் விடுவதாயில்லை "பெற்ற மகளை நீங்கள் நம்ப மறுத்துவிட்டீர்கள் தெய்வம் கண்ணை மூடிக்கொண்டா இருக்கும்? உங்கள் மாப்பிள்ளையோ நீங்களோ இனிமேல் குருவம்மாவை அலட்சியம் செய்துவிட முடியாது. குருவம்மா உத்தமி என்பதற்கு சாட்சிகிடைத்துவிட்டது!" என்ருர் மானேஜர்.

செண்பகம் ஏளனமாகப் பார்த்தான்.

"ஆமாம்! குழந்தைக்கு வலது காலில் ஆறு விரல்கள்! கழுத்தில் மச்சம்!"

இந்த இடத்தில் செண்பகம் நெற்றியைச் சுழித்தான்; புருவத்தை நெறித்தான். அவனை அறியாமலே அவன் கையில் இருந்த தேங்காய் — பழத்தட்டு தரையில் விழுந்தது.

"கணக்கப்புள்ளய்யா! உண்மையாச் சொலறீங்களா? ஆறு விரல்! மச்சம்!" செண்பகம் கதறிக்கொண்டு சித்திரை வீதி வழியாக ஆஸ்பத்திரிக்கு ஓடினன்.

ஏன் செண்பகம் அப்படி ஓடினன்?

திண்ணபிரத்திற்கும் வலது காலில் ஆறு விரல்கள்தான்' அவன் கழுத்திலும் மச்சம் உண்டு' அதனல்தான் மகளிடம் மன்னிப்புக் கேட்க ஓடினன்:

களிப்புடனும் கண்ணீருடனும் வரும் ஆயிரக்கணக்கானவர்களை ஒரே சமயத்தில் காணவேண்டுமானல் சென்னை கிண்டியில் ஞாயிற்றுக் கிழமைகளில் நடக்கும் குதிரைப் பந்தய மைதானத்தின் வெளியே பார்க்கலாம். குதிரைப் பந்தய முறை இங்கிலாந்தில் இன்னும் அதிகம். அங்கு இராணி எலிசெபெத் அவர்களே பந்தயக் குதிரை வளர்க்கிருர் என்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன். அரசி என்பதற்காகத்தானே என்னவோ அவர் வளர்க்கும் குதிரைகள் மீது இலாயவரிகள் கிடையாது. ஆனல் உண்மையில் என்னவோ குதிரை வளர்ப்பு அவருக்கு பெருத்த நஷ்டத்தைத்தான் கொடுக்கிறது. அவர் வளர்க்கும் 36 பந்தயக் குதிரைகளின் மதிப்பு 86000 பவுன்கள் (ஒரு பவுன் என்பது சுமார் 14 ரூபாய்) இவைகளை வளர்ப்பதற்கான செலவு மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 12000 பவுன்கள். இந்த ஆண்டு இந்தக் குதிரைகளின் மூலம் கிடைத்த வருவாய் என்னவோ 859 பவுன்கள்தான்! பத்தை, எட்டாக மாற்றபடாத பாடு என்பார்களே அது இங்கு மிகவும் பொருந்தும்!

உலக அரங்கில்

ஒவ்வொருவரும் ஒரு படி பால் ஊற்றவேண்டும் என்று அந்த ஊரின் குறிப்பிட்ட வகுப்பினர் கேட்டுக் கொள்ளப்பட்டார்களாம். பாலைத் தேக்கிவைப்பதற்கான பெரும் பாத்திரம் உயரத்தில் வைக்கப்பட்டது. சென்று ஊற்றுவதற்காக ஏணியும் வைக்கப்பட்டது. ஒவ்வொருவராக மூடிய பாத்திரத்துடன் வந்து உயரே ஏறி பாத்திரத்தைக் கவிழ்த்துச் சென்றனர். கடைசியில் பாத்திரத்தைப் பார்த்தார்கள் மற்றோர். வைக்கப்பட்ட நிலையிலேயே வெறுமையாகவேஇருந்தது! அதாவது ஒரு துளி பால்கூட இல்லை!

—எத்தனையோ பேர் ஊற்றுகிறார்கள்; அதில் ஒருவர் ஊற்றாமல் வெறும் பாத்திரத்தை எடுத்துச் சென்று ஊற்றுவதுபோல் கவிழ்த்துக் காண்பித்துவிட்டு இறங்கிவிட்டால் எங்கே தெரியப்போகிறது என்று ஒவ்வொருவரும் தனித் தனியே எண்ணிவிட்டதால் வந்த வினை பாத்திரம் காலியாகவே இருந்ததாம்!

ஆண்டுதோறும் இலண்டனில் நடைபெறும் காமன்வெல்த் நாடுகளின் பிரதமர்கள் மாநாடு இந்த ஆண்டுதான் காமன்வெல்த் அமைப்புக்கான ஒரு மத்திய காரியாலயத்தை நிறுவியுள்ளது என்ற செய்தி மேலே கூறப்பட்ட கதையின் பின்னணியைத்தான் நினைவூட்டுகிறது.

கட்டுக்கோப்பை ஏற்படுத்தவும், மத்தியத் தொடர்பை உருவாக்குவதற்கும் பொருளாதார சமுதாய அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நிகழ்ச்சிகளைப் பராமரிப்பதற்கும் ஒரு நிரந்தர மத்திய அலுவலகம் தேவை என்ற கருத்து இந்த ஆண்டுதான் செயலாகப் பரிமளித்துள்ளது. அப்படியென்றால் இத்தனை ஆண்டுகளும் கூடிக் கூடிக் கலைந்தது எதற்காக? என்ன விளைவுகளை ஏற்படுத்தியது?

ஆண்டுதோறும் நடைபெறும் காமன்வெல்த் மாநாடுகளைக் கவனித்து வருபவர்கள், கருத்துப் பரிமாற்றத்துக்காக கலாச்சார அடிப்படையில் கூடிக்கலையும் ஒரு ஆண்டு நிகழ்ச்சி என்பதிலிருந்து பல தடவைகளில் அரசியல் போர்க்களமாகவே மாறியுள்ளதையும் கவனித்திருக்கலாம். மேலும் 'காமன்வெல்த்' என்ற பொது அல்லது பரந்த நோக்கம் மறைந்து தங்கள் தங்கள் கருத்துக்களுக்கு வெற்றி தேடுவது எப்படி-தங்கள் தங்கள் கோபதாபங்களை வெளிப்படுத்துவது எப்படி என்ற அடிப்படைகளில்கூட நிகழ்ச்சிகள் நடைபெற்றதையும் அரசியல் பார்வையாளர்கள் காணத் தவறவில்லை உதாரணமாக இங்கிலாந்தின் பிரதமர் வில்சன் அவர்களே வியட்நாம் விவகாரத்தில் ஒரு தூதுக் குழுவை ஏற்படுத்த எடுத்துக்கொண்ட சிரமங்கள் வியட்நாமில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தைக் காட்டிலும் அதில் தான் பெறும் வெற்றி உள்நாட்டு அரசியலில் தனக்கு ஒரு நிலையான இடத்தைத் தேடித் தரும் என்ற அவாவிலேயே செயல்பட்டார் என்பதைப் பல விமர்சகர்கள் எழுதிக் காட்டியுள்ளனர். இதுபோன்ற ஒரு கருத்தைத்தான் ஒவ்வொருவரும் தனித்தனியே தங்கள் தங்களுக்குத் தேவைப்பட்ட முறையில் எண்ணிச் செயல்பட்டிருப்பார்கள் என்று சொல்வதில் எப்படி தவறு காண முடியும்?

○

உலக நாளிதழ்களில் செய்தித் தலைப்புகளாக வந்திருக்கவேண்டிய அல்ஜீயர்ஸ் நகருக்கு அருகிலுள்ள "கிளப் டிஸ்பினஸ்" என்ற கடலோரத்து இடம் இன்று வெறிச்சோடிக் கிடக்கிறது. அரசியல் விபத்துக்குள்ளாகியிருக்கும் அல்ஜீரியாவின் பென்பெல்லா இந்த இடத்தைத் தனது புகழின் சின்னமாக மாற்றத் திட்டமிட்டிருந்தார். ஆசிய ஆப்பிரிக்க மாநாடு மட்டும் குறித்தபடி நடந்திருந்தால் இந்த இடம் வரலாற்றுப் புகழ் பெற்றிருக்கும். ஆனால் அதற்காகச் செலவழித்த 250 இலட்சம் டாலர்கள் இன்று கடலில் பெய்த மழைநீராகி விட்டது. மாளிகைகள், அலுவலகங்கள், கடைவீதிகள், போக்குவரத்து வசதிகள், தொடர்பு சாதனங்கள் அனைத்தும்கொண்ட ஒரு மாதிரிநகரத்தையே எகிப்து, ஐ.நா., ஈராக் போன்ற இடங்களிலிருந்து வந்த நான்காயிரம் தொழில் வல்லுனர்கள் இரவு பகலாக உழைத்து உருவாக்கினர். உலகெங்கணுமிருந்து வந்த 1600க்கு மேற்பட்ட செய்தியாளர்கள் தங்கள்எழுதுகோல்களைத் திறந்து வைத்துக் கொண்டு காத்திருந்தனர். ஆனால் ஜனாதிபதிகளும், சாவாதிகாரர்களும், பிரதமர்களும் கூடிப் பேசியிருக்க வேண்டிய அந்த கடற்கரையோர நகரில் இன்று உல்லாசப் பிரயாணிகள் ஓடி விளையாடி இன்பம் பெறுகிறார்கள். நடந்தவைகளையெல்லாம் உணர்ந்துகொள்ள முடியாத கடலலைகள் தொடர்ந்து ஆர்ப்பரித்த வண்ணமிருக்கின்றன!

✽

மன்னிப்பு!

இத்தாலி நாட்டின் பெரும் பேச்சாளர் ஒருவர் — பெயர் டாக்ஸ்க்; முன்பு இருந்துவந்த கட்சியிலிருந்து விலகி புதிய கட்சியொன்றைத் துவக்கினார். புதியகட்சியின் கொள்கைகளை அவர் விளக்கிக் கூறும்போது தான் முதலில் இருந்துவந்த கட்சி தவறான பாதைக்கு இழுத்துச் செல்லக் கூடியது என்றும் கொள்கை மோசமானது என்றும் கண்டித்து வீரமுழக்கமிட்டார்.

நான் இப்போது கூறுவது தான் நாட்டுக்குத் தேவையான கொள்கை — திட்டம். நான் இது நாள்வரை தவறான கொள்கைகளைப் பிரசாரம் செய்து வந்ததற்கான என்னை மன்னித்து விடுங்கள் — என்றார் டாக்ஸ்க்.

கூட்டத்திலிருந்த ஒருவர் கேட்டார், தலைவரே! இப்போது இப்படிப் பேசுவதற்காக மறுபடியும் எப்போது மன்னிப்பு கேட்கப் போகிறீர்கள்?" என்று.



சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து வடக்கே நெடுந்தூரப் பிரயாணம் செய்பவர்களிடம் டிக்கட் வாங்குவதற்காக க்யூவில் நின்றதிலிருந்து பயணத்தை முடித்து இரயில் பெட்டிகளினின்று இறங்குவது வரை பட்ட அனுபவத்தைக் கேட்டால் இத்துணைக்கண்டத்தின் போக்குவரத்துத் துறையைப் பற்றிய ஒரு முழு உருவம் தெரிந்துவிடும். இப்படி தரையில் பொருத்தப்பட்ட தண்டவாளங்களின்மீது பிரயாணம் செய்வது பெருந்தத் தொல்லைகளுக்கிடையில் இருக்கும்போது சோவியத் யூனியன் "ஆகாயத்திலேயே பறக்கக்கூடிய இரயில்" ஒன்றைக் கண்டு பிடித்துள்ளது. அதன் பெயர் A N. 22 என்பதாகும். அமைப்பை உருவாக்கியவர் அலக்அண்டனுவ் என்பவர். 720 பிரயாணிகள் அல்லது 80 டன் எடையுள்ள சாமான்களைச் சுமந்து கொண்டு மணிக்குச் சுமார் 700 கிலோமீட்டர் வேகத்தில் பறக்கக்கூடிய இந்த விமானம் இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகளுக்கு வந்தால் பேருதவியாய் இருக்கும். ஒரு கிலோமீட்டருக்கு 8 பைசாக்கள்தான் கட்டணம். இதன்படி பம்பாயிலிருந்து புதுடில்லிப் போய்வர ஒருவர் ரூ. 60 கொடுத்தால்போதும். பல ஆண்டுகளாக இதுபோன்ற 'பறக்கும் இரயிலைக்' கண்டுபிடிக்க வேண்டும் என கவனத்தைச் செலுத்தி வரும் அமெரிக்கா இங்கிலாந்து ஆகிய நாடுகளை முந்திக்கொண்டு இச்சாதனையை ஏற்படுத்தியுள்ளது சோவியத் யூனியன்.

○

"முந்திரா ஊழல்" விவகாரம் சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டின் அரசியல்-பொருளாதாரத் துறையையேகலக்கியதை அதற்குள் எவரும் மறந்திருக்க முடியாது, அந்த நினைவு என்றும் பசுமையாக மக்கள் மத்தியில் இருக்கவேண்டும் என்பதற்காகத்தானோ என்னவோ அதில் சம்பந்தப்பட்ட சாவ்ளாவும் டி. டி. கிருஷ்ணமாசாரியும் ஆளும் அமைச்சர்களாய் அருகருகே அமர்ந்திருக்கின்றனர். அந்த முந்திரா என்பவர்தான் இந்த துணைக்கண்டத்திலேயே தனிப்பட்ட நபர் என்ற வகையில் 1958-59ல் அதிக அளவு வருமான வரியைச் செலுத்தியவர். இத்தகவலைத் தந்திருப்பது மேமாதத்திய அரசாங்க கெஜட்.

○

உடல்நலம், பொருளாதாரம் இவைகளையும் மறந்து "என்ன செய்வது? பழக்கமாகிவிட்டதே" என்று காபியையோ சிகரெட்டையோ நிறுத்த முடியாததுபற்றிக் கவலைப்படுகிறீர்களல்லவா அவர்களுக்கு அப்பழக்கத்தைப் போக்கிக்கொள்ள ஒரு வழி இருக்கிறது. பிளேயர்ஸ்' சிகரெட்டேதான் குடிப்பேன் என்பவர்கள் தொடர்ந்து மூன்று வாரங்கள் அதை மாற்றி வேறு ஒரு விலாசமிட்ட சிகரெட்டைப் பிடிக்கவேண்டும், அல்லது காப்பியையே குடிப்பவர்கள் அதை மாற்றி டீயை சில நாட்கள் குடிக்க வேண்டும். இதேபோன்று செய்தால் அப்பழக்கம் தங்களைவிட்டு அகலும். இதுபோன்று மருத்துவமனையில் செய்த ஒரு பரிசோதனையில் மூன்றில் இரண்டுபங்கு பேர் வெற்றிபெற்றுள்ளனர். இத்தகவலைத் தந்திருப்பது "பிரிட்டிஷ் மெடிகல் ஜெர்னல்" என்ற பத்திரிகை.

○

பூமிதானத் தலைவர் விநோபாபாவே தனது பாதயாத்திரைப் பழக்கத்தை மாற்றிக்கொண்டு இனி காரிலேயே பயணம் செய்யப்போகிறார் என்ற செய்தி யாவரது கவனத்துக்கு வருகிறது. 1951-ம் ஆண்டு ஐதராபாத்துக்கு அருகிலுள்ள சிவராமபள்ளி என்ற இடத்தில் நடந்த சர்வோதய மாநாட்டுக்குச் செல்லும்போதுதான் முதன்முதல் இப்பழக்கத்தை மேற்கொண்டார் பாவே. இப்படி முதன் முதல் ஆரம்பித்த பாதயாத்திரையின் போதுதான் ஆந்திர மாநிலத்தில் உள்ள நலகொண்டா மாவட்டத்தின் பூசாரபள்ளி என்ற கிராமத்தில்பூதானத் தத்துவம் அவர் மனதில் உதித்தது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் பெற்ற பாதயாத்திரையை வருகிற செப்டம்பர் மாதம் பீகார் மாநிலத்தில் துவங்க இருக்கும் பூதானப் பயணத்தின் போது விட்டுவிட்டு சுமார் 1500 மைல்கள். நீண்ட இடைவெளிக் காலத்துக்குப் பிறகு காரிலேயே பயணம் புறப்படப்போகிறார்.

○

காலஞ்சென்றவரும் முன்னாள் அமெரிக்க குடியரசுத் தலைவருமான பிராங்ளின் டி. ரூஸ்வெல்ட் அவர்களின் நான்கு மகன்களும் இப்போது அமெரிக்க அரசியலில் தீவிரமாக இறங்கியுள்ளனர். ஜேம்ஸ் ரூஸ்வெல்ட், இலியட் ரூஸ்வெல்ட், பிராங்ளின் ரூஸ்வெல்ட் ஜூனியர், ஜான் ரூஸ்வெல்ட் ஆகிய அந்த நால்வருக்கும் முறையே 57, 54, 50, 48 வயதாகின்றது. முதல்வர் லாஸ் ஏஞ்சல்ஸ் நகர மேயர் பதவிக்குப் போட்டியிட்டார். இரண்டாமவர் மியாமிபீச் நகரத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார். மூன்றுமவர் 1966-ம் ஆண்டுவாக்கில் நியூயார்க் நகர அரசியலில் நுழைய இருக்கிறார். நான்காமவர் பெரும் பாங்கி நிறுவனத் தொடர்பிலிருந்து ரிபப்ளிக் கட்சியின் முழுநேர அரசியல்வாதியாக மாறுகிறார்.

○

எத்துணையோ துறைகளில் உலகின் முன்னோடியாக இருக்கும் அமெரிக்கா இனவேற்றுமைத் துறையில் மட்டும் இன்னும் ஆபிரகாம் லிங்கனது கனவை நனவாக்கவில்லை. அமெரிக்காவில் உள்ள மிசௌரி பல்கலைக் கழகத்தின் சரித்திரத்திலேயே முதல்வதாக இப்போதுதான் ஒரு விஞ்ஞான ஆசிரியராக ஒரு நீக்ரோ நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதிலிருந்து அந்நாட்டின் சில பகுதிகளில் தீவிரமாக உள்ள நிறவெறி உணர்வை ஓரளவு உணர்ந்து கொள்ளலாம்.

●

காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, ஆலயி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.